
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23] குரோதிஆண்டு ஆனித்திங்கள் 10—7—64 [ இதழ்

திருக்குவளை கும்பாபிஷேக விழாவில்



மின்விளக்குகளால் ஒப்பனைசெய்யப்பெற்ற
வெள்ளித்தேரில் ஸ்ரீ தியாகராஜப்பெருமான் திருவீதியுலா.

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர்

## அருள்வாக்கு

இந்தனத்தில் அங்கி
எரிஉறுநீர் தேனிரதங்
கந்தமலர்ப் போதுவான்
காலொளிகண் —சந்ததமும்
அத்துவித மாவதுபோல்
ஆன்மாவும் ஈசனுமாய்
முத்தியிலே நிற்கும்
முறை. (19)

ஆசிரியர்:-

வித்துவான்,

**சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்**

துணையாசிரியர்:-

வித்துவான்,

**சொ. சிங்காரவேலன், M.A.,**

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

**தருமையாதீனத் திங்கள் இதழ்**

மலர் 23 | 10-7-64 | இதழ் 8

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | கோளிலியப்பர் கும்பாபிஷேகம் | ... 431 |
| 2 | வணக்கம் | ... 435 |
| 3 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை | ... 436 |
| 4 | தமிழ் கூறு நல்லுலகம் | ... 447 |
| 5 | தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள் | ... 451 |
| 6 | சங்க இலக்கியங்களில் சமயம் | ... 453 |
| 7 | சஹஸ்ராகமம் | ... 457 |
| 8 | திருக்கோளிலி | ... 461 |
| 9 | சித்தாந்த வினாவிடை | ... 468 |
| 10 | திருக்குவளையில் பன்னிருதிருமுறை மாநாடு | ... 473 |
| 11 | பாராட்டு வாழ்த்துரைகள் | ... 477 |
| 12 | சப்தவிடங்கத் தல தரிசனம் | ... 481 |
| 13 | செய்திகள் | ... 483 |
| 15 | கடிதம் | ... |
| 14 | எதிர்காலம் | ... 491 |

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 ] சோபகிருது - ஆனி - 10—7—64 [ இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## கோளிலியப்பர் கும்பாபிஷேகம்

'வாழ்வில் துயரம் இன்றி வாழவேண்டும். இன்பம் பெருகிச் செழிக்கவேண்டும்' என்று எல்லோரும் விரும்புகிறார்கள். அவ்வாறு விரும்பாதவர் எங்கும் இல்லை. அந்த விருப்பம் செயலாகிவிட முடியவும் இல்லை; அதற்கு இறைவன் திருவருள் துணை தேவையாயிருக்கிறது. அத்துணை மெய்த்துணையாக நின்றாலேயே துன்பம் தொலையும்; இன்பம் நிலைக்கும். திருவருளில் தோய்ந்தவர்க்கு எங்கும் இன்பமே; என்றும் இன்பமே. 'இன்பமே எந்நாளும் துன்பம்

இல்லை' என்றும், ''பருகலாம் பரமாயதோர் ஆனந்தம்'' என்றும் அப்பர் அடிகள் அருள்கின்றார்கள். 'எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதா' என்பது மணிவாசகம். இந்த இன்பம் நமக்கும் வரவேண்டாமா? அந்த அருளாளர்கள் திருவடிகளில் பற்றுவைத்து மெய்யாக வாழ்ந்தால் அப்பேறு வாய்க்கும். இன்பத்திற்கு இடையூறாக வரும் கோள் - துயரங்கள் கோள் இலி அப்பன் பேரருள் கூடினாலேயே நீங்கும்

இந்த முயற்சியில், வீண்நாள் போக்கலாகாது; போக்கவும் கூடாது 'வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்' என்ற ஏச்சுக்கு இடம் தரலாகாது. வீண் நாள் கழித்தலை விட வேறு தீய செயல் இல்லை. திருநீலகண்டனாகிய பெருமான் திருவடிகட்கு அடிமை செய்யும் அன்பு முதற்கண் வேண்டும். 'நாம் உடைமை; அவன் உடையான்;' 'நாம் அடிமை; அவன் தலைவன்' என்ற நல்லுணர்வு உள்ளத்தில் எந்தக்கணமும் விட்டு நீங்கலாகாது. அந்த உணர்வு நீங்காதிருந்தாலேயே - திருவடிப்பற்றினால் விளையும் சீருள் திறமும் விட்டு நீங்காதிருக்கும்.

இனி, அந்த உணர்வு உள்ளத்துள் நின்று ஒளி பெருக்குவதற்கான சில உபாயங்களையும் சாதனங்களையும் கடைப்பிடித்தல் இன்றியமையாதது. அவற்றுள் தலையாயது அவன் திருநாமம் பரவுதல்; வாழ்த்துதல்; போற்றிசைத்தல். அவ்வாறு அவன் திருப்பெயரை ஓதினால்வரும் நற்பலன்களை நம் சமயாசாரியப் பெருமக்கள் மூவரும் அருளிய பஞ்சாட்சரப் பதிகங்கள் விளக்கும். அவ்வாறு செய்து வந்தால் சமுதாயம் தழைக்கும்; கேடுகள் விளையா; கிரகங்களால் - கோள்களால் வரும் துன்பம் விலகும்; நிலைத்த இன்பம் பெருகும்.

இவ்வாறு அருளும் பெருமான் எங்குள்ளான் ? கோளிலி என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளான். அவனே இவ்வாறு பாடிப் பரவிப் பழந்தக்கராகப் பண்ணிசைத் துள்ளார்' ஞானக்கொழுந்தாக விளங்கும் திருஞான சம்பந்தப் பிள்ளையார். அவ்வழகிய தமிழ்மாமறைத் திருப் பாடல் பின்வருவதாகும்.

" நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய் நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறமருளிக்
கோளாயநீக்கும் அவன் கோளிலி எம்பெருமானே "

பணிந்தெழுவார் மனத்தில் துயரம் கெடுப்பான்; நடுக்கம் இலா அமர் உலகம் நண்ணுவிப்பான்; கொடுக்ககிலா வரம் கொடுப்பான், என்று அருளும் ஆளுடைய பிள்ளையார், திருவாக்கு இத்தலத்தின் செந்தமிழ் மாலையில் சிறந்து நிற்கின்றது.

தருமையாதீனத்தின் இருபத்தேழு திருக்கோயில் களுள் ஒன்றாய்த் திகழும் இத்தலத்தில், சப்தவிடங்க மூர்த்தங்களுள் ஒன்றாய ஸ்ரீ தியாகராஜ மூர்த்தம் பெருஞ் சிறப்பு. தியாகேசப் பெருமான் இங்கு வீற்றிருந்து தியாகநெறி காட்டுகின்றான். அவனுடைய தியாக சீலமே உலகங்கட்கெல்லாம் முதன்மையான சீலம். அதுவே சைவசமயச் செந்நெறி; உலகிற்கு வழங்கும் நேரிய நெறியின் வாய்மை. உலகமெலாம் அழியவந்த நஞ்சினை உண்டு உலகைக் காத்தருளிய பெருந் தியாகத்தின்முன் உலகர் செயல்கள் எல்லாம் அணுவினும் கீழ் எனல் மெய்ம்மை. அவன் ஒருவனே தியாகன்; கருணைக்கடல்; நம்மைக் காப்பவன்; வாழ்விப்பவன்; நாம்செய்யும் குற்றங்களையும் குணமெனக் கருதி அருள் வழங்கும் மாபேராளன்; அவனே

'வள்ளல்' என்று வாயாரக் கூறி' வாழ்வெலாம் பாடி ஆடுதல் வேண்டும் என்பது நம் பரமாசாரிய மூர்த்திகளின் திருவுள்ளம்.

திருக்குவளை என இந்நாளில் விளங்கும் இத்தலத்தில், பெருமான் திருக்கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணிகள் செய்து பெரும்பொருட் செலவில் கும்பாபிஷேகம் நிகழ்த்தத் திருவுள்ளம் கொண்ட ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் ஆனிச் சோமவாரத்தில் 29-6-64ல் அனைவர் மனமும் கண்களும் குளிரக் கும்பாபிஷேகமும் நிகழ்த்தி யருளினார்கள். ஆதீனக் கோயில்களில் பலவற்றைக் கும்பாபிஷேகம் செய்துவரும் பாங்கில், இந்தக் கும்பாபிஷேகமும் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. திரு நெறிய தெய்வத் தமிழைத் தெளிவுற விளக்கும் பன்னிரு திருமுறை மாநாடும், அகண்ட பாராயணமும் நிகழ்ந்தன. யாகசாலை வழிபாடுகள் முதலி யனவும் சிறப்புற உரிய காலங்களில் நடந்தேறி, அன்புலகின் உள்ளமெலாம் நிறைந்தன. நான்மறை விதி வழாது வேள்விகள் முதலியன அனைத்தும் நடைபெற்றன. ஸ்ரீ தியாகேசன், திருவருள் வெள்ளத்தை உலகமெலாம் பரப்பும் ஒளிவிளக்கமாக நிகழ்ந்த இதிற் பங்குபெற்ற அனைவர் உள்ளங்களும் குளிர்ந்தன.

கோள்களால் வரும் தீமைகள் அனைத்தும் நீங்கி இன்ப வாழ்வு பெருகிச் சமுதாயம் அனைத்தும் சிறந்து வாழ இத் தலத்து நிகழ்ந்த இந்த அரிய நிகழ்ச்சி துணைபுரியும். இதனை நிகழ்வித்த தருமையாதீன 25-ஆவது குருமுதல்வர், கயிலை கண்ட தவவேந்தர் கழலடி பரவிக் குருவருளும் திருவருளும் பெருகி அன்புலகம் நீடுவாழ்வதாக என்று வாழ்த்துவதில் "ஞானசம்பந்தம்" பெருமையும் மகிழ்வும் அடைகின்றது.

# வணக்கம்

திருவருள் உயர்வைச் செந்தமிழ் மொழியால் நிகழ்வித்து வரும் ஞானசம்பந்தத்தினது இம்மாத இதழ் சீரடியார்களுக்குக் கோளாய நீக்கும் கோளிலி எம்பெருமானது சிறப்பினை முதன்மையாகக் கொண்டு வெளிவருகின்றது. மெய்கண்ட நூல்களில் எட்டாவது நூலாய், திருவருளையும் குருவருளையும் பற்றிய அரியகருத்துக்களை விளக்கும் திருவருட் பயனை, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் தங்கள் அருளுரையாக எடுத்து வழங்கியிருத்தல், இவ்விதழுக்குச் சிறந்ததொரு முதன்மையைத் தருகின்றது.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள், திருவருட்பயன், உலகிற்கு ஓர் இணையற்ற நூலாய் விளங்கும் திருக்குறள் போல. சைவத்திற்கு விளங்கும் திருக்குறளாதலை, இனிது விளங்க அருளுகின்றார்கள். அவ்வருளுரையின்கண் திருவருளினது அருமை பெருமைகள், குருவருளின் சிறப்பு. சுத்தாத்துவித சித்தாந்த பரமூத்தியின் இயல்பு, அவை பற்றிய தோத்திர சாத்திர மரபுகள் முதலிய இன்றியமையாத அரிய பொருள்களை உணர்ந்து நேயர்கள் பயன் பெறலாம்.

திருக்குவளை மகா கும்பாபிடேக விழாவில், ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்குப் பல இடங்களிலிருந்தும் வந்த அன்பர் பலர் மகிழ்ந்தளித்த வரவேற்புகளும். ஷ மகா கும்பாபிடேக நிகழ்ச்சிகளும் இடம் பெற்று விளங்குதல், இவ்விதழுக்குத் தனிச் சிறப்பாய் இலங்குகின்றது.

சென்ற இதழில் தொடங்கப்பெற்ற ‘சங்க இலக்கியங்களில் சமயம்’ ‘தமிழ் கூறும் நல்லுலகம்’, என்னும் ஆய்வுக் கட்டுரைகள் இவ்விதழிலும் தொடர்ந்து வந்துள்ளன. சித்தாந்த வினாவிடை. தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரை. சஹஸ்ராகமம் என்னும் தொடர் கட்டுரைகளும் வழக்கம்போல் விளங்குகின்றன.

எதிர்காலம், செய்திக் குறிப்புக்கள் என்பவையும் அமைந்துள்ளன. இவ்வெல்லாவகையாலும் ஞானசம்பந்தம் பெறுபவர்கள் நற்பயன் பலவும் பெறுவார்களாக.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

## திருவருட் பயன்

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.

---

அருளிற் பெரிய தகிலத்தில் வேண்டும்
பொருளிற் றலையிலது போல்.

ஆரறிவார் எல்லாம் அகன்ற நெறியருளும்
பேரறிவான் வாராத பின்.

தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலைநீ ஏகமெனக் கொள்.

—உமாபதி சிவம்

மக்கள் ஆன்மலாபத்தை அடைதற்குரிய வழியைத் தெரிவிப்பன, சமயங்களே. 'சமயம்' என்றாலே, 'கடவுட் கொள்கையுடைய நெறி' என்று நினைப்பதுதான், பொதுவாக எங்கும் காணப்படுகின்ற ஒன்று; எனினும், கடவுட் கொள்கை இல்லாமலே, 'சமயம்' என்று சொல்லிக்கொள்ளும் நெறிகளும் உள.

இனி, கடவுட் கொள்கையுடைய சமயங்களிலும், அக் கொள்கையை முதன்மையாகக் கொள்ளாமல், ஓரளவில்

கொண்டிருக்கின்ற சமயங்களும் உண்டு. எல்லாச் சமயங்களும், ' உயிர் அடையவேண்டிய முடிந்த பயன் இது ' எனக் கூறுவதில்தான் நாட்டம் உடையன. இந்த முடிந்த பயனே, ' முத்தி ' அல்லது ' வீடுபேறு ' எனக் கூறப்படும். முத்தியாகிய பெரும்பயன், அந்த அந்தச் சமயத்தின் தரத்திற்கேற்பவே அதன தன்கண் சொல்லப்படுகின்றன.

சமயங்களுள் தலையாயதாகிய சைவசமயம் ஒன்றே கடவுட் கொள்கையை முற்றிலும் முதன்மையாகக்கொண்டு, எண்ணற்ற பலப்பல வகையான எல்லா நிகழ்ச்சிகளுக்கும் இறைவன் திருவருளே நிலைக்களம் எனக் கூறுகின்றது. முத்திப் பெரும் பயனும், உயிர் இறைவனது திருவருளை அடைவதுதான் என்கின்றது சைவ சமயம். இதனால், சைவ சமயத்தை, 'திருவருள் நெறி' என்றே கூறலாம்.

" அருளே உலகெல்லாம் ஆள்விப்பது ஈசன்
அருளே பிறப்பறுப்ப தானல் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ தெனக்கு "

—காரைக்காலம்மையார்.

என்றும்,

" மருளுந் தெருளும் மறக்கும் அவன்கண்
அருளை மறவாதே யுந்தீபற " (திருவுந்தியார்)

என்றும் சைவ சமயத் தோத்திர சாத்திரங்கள் அனைத்தும், இறைவனது திருவருளையே நாம் பெறும்பொருளாகக் கூறுவதை யறியலாம்.

" தேகம் மறந்து திருவருளாய் நின்றுசிவ
போகம் விளையப் புணர்நெஞ்சே - நோக
வருந்தாமல் தீவினையில் வாடாமல் துன்பம்
அருந்தாமல் நீபிறவா மல் "

என்பது முதலாகக் குருஞானசம்பந்தர், இறைவன் திருவருட் பேற்றை உபதேசித்தருளிய திருவாக்குக்கள் பல உள்ளன.

பிற பிற சமயங்கள் பிற பிற பயன்களையே முத்தியாகக் கூற, சைவ சமயம், இறைவனது திருவருளை அடைதலையே முத்தி எனக் கூறுகின்றது.

" அரிவையர்இன் புறுமுத்தி கந்தம் ஐந்தும்
அறும்முத்தி திரிகுணமும் அடங்கும் முத்தி
விரவுவினை கெடும்முத்தி மலம்போம் முத்தி
விக்கிரக நித்தமுத்தி விவேக முத்தி
பரவும்உயிர் கெடும்முத்தி சித்தி முத்தி
பாடாண முத்திஇவை பழிசேர் முத்தி
திரிமலமும் அகலஉயிர் அருள்சேர் முத்தி
நிகழ்முத்தி இதுமுத்தித் திறத்த தாமே "

என்னும் சிவப்பிரகாசச் செய்யுளால் சைவசமயம் கூறும் முத்தி இது என்பதனை அறியலாம். இவ்வருள்சேர் முத்தியையே, " அடிசேர் முத்தி " என்கின்றது, சிவஞான சித்தி.

இன்னும் 'பரஞானம், அபரஞானம்' என்னும் இருவகை ஞானங்களுள் பரஞானத்தையும் 'திருவருள்' என்றலே சைவ மரபு. இதனை, " உயர்ஞானம் இரண்டாம் மாறு மலமகலாது மன்னு போதத் - திருவருள் ஒன்று ஒன்று அதனைத் தெளிய ஓதும் சிவாகமம் " என்னும் சிவப்பிரகாசத்தால் அறியலாம். ஆகவே, இறைவனது திருவருளின் இயல்புகளை விளக்குவனவே சைவ சித்தாந்த சாத்திரங்கள் என்பது விளங்கும்.

சித்தாந்த சாத்திரங்கள் யாவும் திருவருளைப்பற்றிய விளக்கங்களைத் தருவனவேயாயினும் அவற்றுள் ஒரு சாத்திரமே, 'திருவருட் பயன்' என்னும் பெயரோடு விளங்குகின்றது. இதுவும், சந்தானசாரியர் நால்வருள் நான்காமவராகிய உமாபதி தேவ நாயனுரால் அருளப்பட்டதே. திருவருளாகிய பயனைத் தருதல் பற்றி, இதற்கு இப்பெயர் இடப்பட்டது எனலாம். ஆயினும், 'திருவருள்' என்பது இங்கு அதனைத் தெளிய ஓதும் சிவாகமம் அல்லது சைவ சாத்திரங்களையும், 'பயன்' என்பது, அச் சாத்திரங்களின் திரண்ட பொருளையும் குறிக்க, சித்தாந்த சாத்திரங்களின் பொருள்கள் அனைத்தையும் சுருங்கக்கூறி விளங்க வைக்கும் இந்நூலுக்கு, 'திருவருட் பயன்' என்பது பெயராயிற்று என்றலே பெரிதும் பொருந்துவதாம்.

"எல்லாப் பொருளும் இதன்கண் உள இதன்கண் - இல்லாத எப்பொருளும் இல்லையால்" (திருவள்ளுவ மாலை) என்று சிறப்பிக்கப்பெற்ற திருக்குறளில், திருவள்ளுவர் நாற்பாலை முப்பாலில் அடக்கிக் கூறினர். அதற்குக் காரணம் அவர் உலகியலாகிய பொதுநூல் செய்யப் புகுந்தாமையேயாம். மக்கள் உணர வேண்டியவை 'உலகியல், மெய்ந்நெறி' என இரண்டு. உலகியல் பொது; மெய்நெறி சிறப்பு. அதனால், பொதுநெறித் திருக்குறள்போல, சிறப்புநெறித் திருக்குறளும் வேண்டுமன்றோ! அதனையே, உமாபதி சிவாசாரியார், 'திருவருட் பயன்' என்னும் பெயரால் செய்து உலகிற்கு உதவினர் என்பது, இந்நூலை நோக்குங்கால் எளிதில் விளங்குவதாகும். மெய்ந்நெறியாகிய வீட்டு நெறிக்கு ஔவையார் இயற்றிய 'ஔவை குறள்' என்பதொன்றும் உண்டு; அது பெரும்பாலும் யோக நிலையோடே நிற்பதாகும்; பொருளியல்பை ஆராயும் ஆராய்ச்சியை அதன்கண் காணுதல் அரிது. இத் திருவருட்பயன் பொருளியல்பை விளக்கும் ஞானபாதமாய் விளங்குவது 'மெய்ந்நெறித் திருக்குறள்' என்றற்கேற்ப, இந்நூல் முழுவதும் குறள் வெண்பாக்களால் ஆக்கப்பட்டு, அதிகாரம் ஒன்றிற்குப் பத்துக் குறள்களாகப் பத்ததிகாரங்களால் இயன்றுள்ளது. இதன் முதற்குறள்,

"அகர உயிர்போல் அறிவாகி யெங்கும்
நிகரில்இறை நிற்கும் நிறைந்து"

எனத் திருக்குறளின் முதற்செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் பெரிதும் தழுவி நிற்கின்றது.

"......................அக்கரங்கள்தோறும்
சென்றிடும் அகரம்போல நின்றனன் சிவனும் சேர்ந்தே"

என்ற சிவஞான சித்தியும்,

"அகர முதலானை அணிஆப்ப னூரானை" (சம்பந்தர்)

"அகரம் முதலின் எழுத்தாகி நின்றாய்
அடியேன்உய்யப் போவதொர் சூழல் சொல்லே"
(சுந்தரர்)

என்ற தேவாரத் திருமுறைகளும் இங்கு அறிந்து மகிழத்தக்கன.

'திருவருட் பயன்' எனப் பெயர்பெற்ற இந்நூலில்தான், திருவருள் தனித்தெடுத்துப் பேசப்படுகின்றது. அப்பகுதி, 'அருளது நிலை' என்னும் தலைப்பினையுடையதாகும். அதன் முதற் செய்யுளே இங்குத் தொடக்கத்தில் கொடுக்கப்பட்ட "அருளிற் பெரியது" என்னும் குறள்.

'பதிமுது நிலை' என்னும் முதல் அதிகாரத்தில் பதியாகிய இறைவனது இயல்புகளையும், 'உயிரவை நிலை' என்னும் இரண்டாம் அதிகாரத்தில் பசுக்களாகிய உயிர்களினது இயல்புகளையும், 'இருள்மல நிலை' என்னும் மூன்றாம் அதிகாரத்தில் பாசங்களின் இயல்புகளையும் தொகுத்துக் கூறிய ஆசிரியர், 'அருளது நிலை' என்னும் நான்காம் அதிகாரத்தில் பதியினது திருவருளின் இயல்புகளை அங்ஙனம் விளக்கியுள்ளார்.

'திருவருளைக் காட்டிலும், உயிர்களால் அடையப்படும் மேலான ஒருபொருள் எதுவும் எங்கும் இல்லை' என்பதை, 'அருளிற் பெரியது அகிலத்து இல்' என அறுதியிட்டுரைக்கின்றது, அருளது நிலையின் முதற் குறள். ஒவ்வொரு பொருள் ஒவ்வொருவருக்குச் சிறந்ததாய்த் தோன்றும்; எல்லாப் பொருளும் எல்லாருக்கும் சிறந்ததாய் நிற்பதில்லை; ஆனல், இறைவனது திருவருள் ஒன்று எல்லார்க்கும் சிறந்ததாய் நிற்பது என்பதை, "வேண்டும் பொருளில் தலையி லதுபோல்" என்னும் தொடர் அறிவுறுத்துகின்றது. எனவே, உடலுக்கு உயிர் இன்றியமையாததுபோல, உயிருக்குத் திருவருள் இன்றியமையாதது எனல் சொல்ல வேண்டா.

உலகில் பொருள்களைக் காண்பதும், கண்டு அவற்றைப் பயன்படுத்துவதும் சூரியனது ஒளியினலேயே நடைபெறுகின்றன. அதுபோல உயிர்கள் இருவினைகளை ஈட்டுவதும்-அவற்றின் பயனை அனுபவிப்பதும் இறைவனது திருவருளாலேயே நடைபெறுகின்றனவாம். அவ்வாறிருந்தும் உயிர்கள் அந்தத் திருவருளைச் சிறிதும் நினைப்பதில்லை. இதற்கு இரண்டு உவமைகளை எடுத்துக் காட்டுகின்றது திருவருட்பயன்.

நாம் பூமியின்மேலே இருந்துகொண்டுதான் எல்லாக் காரியங்களையும் செய்கின்றோம்; பூமிதான் எப்பொழுதும் நம்மைத் தாங்கி நிற்கின்றது; ஆனல், அந்தப் பூமியை நாம் நினைப்பது

இல்லை. அதை மறந்துவிட்டுத்தான் நம் காரியங்களை நாம் செய்கின்றோம். அதுபோலத்தான், நாம் திருவருளை மறந்து விட்டு நம் செயல்களில் ஈடுபடுகின்றோம். இந்த அருமையான ஒரு கருத்தைத் திருவருட் பயன்,

> ''தரையை உணராது தாமே திரிவார்
> புரையை உணரா புவி''

என்னும் குறளால் வெளியிடுகின்றது. வழிப்போக்கன் ஒருவனுக்கு அவன் அறியாமல் அவனுக்குப்பாதுகாப்பாக உடன் செல்கின்ற ஒரு துணைவன்போலவும் உள்ளது திருவருள் என்பது மற்றோர் உவமை.

திருவருள். எல்லாம் வல்லதாதலுடன், அளவற்ற இன்பமா யும் உள்ளது. அதனை அறியாமல் உயிர்கள் உலகத்தைப் பற்றிக்கொண்டு உழலுதல் 'பாலாழி மீன் ஆளும் பான்மைத்து, பாற்கடலில் உள்ள மீன் பாலை அருந்தாது, அதில் உள்ள சிறு மீன்களைப் பிடித்துத் தின்பதுபோன்றும், பாற்கலயத்தின் மேல் இருக்கும் ஒரு பூனை அந்தப் பாலைக் குடியாமல், பக்கத்தில் ஓடும் கரப்பான் பூச்சியை ஓடிப் பிடிப்பது போன்றும் உள்ளது எனப் படுகின்றது.

இறைவன் திருவருளை அடையாமல், உலக இன்பத்தினை நாடி உழலும் நிலையையே நாவுக்கரசர்,

> ''கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ
> மயில்ஆலும் ஆரூரரைக்
> கையினால் தொழாதொழிந்து கனிஇருக்கக்
> காய்கவர்ந்த கள்வனேனே''

என்பது முதலாகத் தமது திருவரூர்ப் பழமொழித் திருப பதிகத்தில் பலபடியாக அருளிச்செய்தார்.

எங்கும் எஞ்ஞான்றும் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்கும் திருவருள் வெள்ளத்திலேயே உள்ள உயிர்கள், அவ்வின்பத்தினை நுகரமாட்டாது துன்பத்தால் துவளுதல், வெள்ளத்திலே மிதக்கும் ஒருவன், நீர்வேட்கையால் நாவறண்டு வாடுவதுபோலாம்.

" வெள்ளத்துள் நாவற்றி யாங்குன் னருள்பெற்றுத்
துன்பத் தின்றும்
விள்ளக்கி லேனை விடுதி கண்டாய் "

என்பது திருவாசகம். பொழுது புலர்ந்து, கதிரவனின் ஒளி நன்கு விளக்கமுற்றுத் திகழும் பகற் காலத்திலும் கண்ணில்லாதவர்க்கு உள்ளது இருளே. அதுபோலத்தான் அஞ்ஞானத்தால் விழுங்கப்பட்ட உயிர்கட்குத் திருவருள் விளக்கம் புலனாகாதிருத்தல். இவற்றைத் திருவருட் பயன்,

" வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்திருளாம்
கள்ளத் தலைவர் கடன்"

என விளக்கியுள்ளது. கள்ளத்தலைவர் - இறைவன் செயல்களைத் தம் செயல் என்பவர். இவ்வாறு திருவருளைப் பெற்றும் பெருதவர்களாய்வருந்தும் அறியாமையுடையவரை. 'தற்கேடர்'- தமக்குத் தாமே கெடுதல் செய்துகொள்பவர் என்று சொல்லியும் இரங்குகின்றது இந்நூல்.

" இன்பசுகத் துள்ளே யிருக்கலாம் எப்போதும்
துன்பவினை உன்னைத் தொடராது - வன்பாம்
மருட்டேக மாயடங்கி மாயாமல் நெஞ்சே
அருட்டேக மாய்அடங்கு வாய் "

என்று, குருஞான சம்பந்தரும் அருளே வடிவாய் அமர்ந்திருப்பதே இன்பநிலை என்பதை அறிவுறுத்துகின்றார்.

உயிர்களுக்கு மிக்க இன்பம் செய்வது பற்றியே சிவபெருமானுக்கு, 'சங்கரன்' என்ற பெயர் உளதாயிற்று என்பதை,

" சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறும் நல்குவான் நலன் "

என்று குறிக்கின்றார் திருநாவுக்கரசர். அத் திருவாக்கினை அங்ஙனமே,

" நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன் "

என எடுத்துக் கூறுகின்றது திருவருட் பயன்.

இத்தகைய திருவருளின் பெருமையைத் திருவருட் பயனில் தான் தெளிவாக வடித்தெடுத்துக் கூறுவதைக் காண்கின்றோம்.

இனி, திருவருளின் பெருமையை விளக்கிய திருவருட் பயன், அத்திருவருளை அடைவது எவ்வாறு என்பதையும் நன்கு விளக்குகின்றது. அது, 'அருளுரு நிலை' என்னும் தலைப் புடையதாகும். அருளுருவாவது குருமூர்த்தமே. ஆகவே. ஆசான் மூர்த்தியின் அநுக்கிரகத்தினாலேதான் ஆண்டவனது அருளைப்பெற இயலும் என்கின்றது திருவருட் பயன். அந்தக் குறளே தலைப்பில் உள்ள, "ஆரறிவார்" என்பது.

பேரறிவாளனாகிய ஆசாரியன் வாராதபொழுது, திருவருளை யார் அறிய முடியும் என்பது அதன் பொருள்.

"ஆரறிவார் நீதிவழி ஆரறிவார் சித்திமுத்தி
ஆரறிவார் நற்றவங்கள் அன்பனைத்தும் - பாரெவர்க்கும்
கத்தன் கமலையில்வாழ் ஞானப்ர காசனெனும்
அத்தன்என்போல் வந்திலனா னால்"

என்ற சிவபோக சாரத்தை இங்கு நினைவு கூர்க. குருவருளை இவ்வாறு ஒரு தனித்த அதிகாரத்தால் கூறுவதும் இத்திருவருட் பயனே. குருவருள் சிவஞான போதத்தில் எட்டாம் சூத்திரமாகும். அதற்கேற்ப, எட்டாவது சாத்திரமாகிய திருவருட் பயனில் அது வலியுறுத்திக் கூறப்படுகின்றது. "தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த" என்பது சிவஞான போதம். "குருவும்" என்ற உம்மை, முன்பு உள்நின்று உணர்த்தியதைக் குறிப்பால் காட்டுகின்றது. அதனைத் திருவருட் பயன், "அறியாமை உள் நின்று அளித்ததே காணும்- குறியாக நீங்காத கோ" எனத் தெளிவாகக் கூறுகின்றது.

ஆசான் மூர்த்தியின் அருளால் திருவருளைப்பெற்று, இறைவனோடு இரண்டறக் கலத்தலே, சுத்தாத்துவித சித்தாந்த பர முத்தியாம். 'இதனைப் பெற்றவர்களே பேரா இன்பப் பெரு வாழ்வினை எய்தியவராவர். இம்முத்திநிலை, திருவருட் பயனில், 'இன்புறு நிலை' என வைத்துப் பேசப்படுகின்றது. அதன் கண், 'முத்திநிலையில் சிவமும் உயிரும் ஒன்றாகிவிடுமோ, இரண்டாகவே இருக்குமோ?' என்ற வினாவிற்கு,

"ஒன்ருலும் ஒன்ரு திரண்டாலும் ஓசையெழா
தென்ருலொன் றன்றிரண்டு மில்"

என்ற விடை தரப்படுகிறது. 'சிவமும் உயிரும் ஒன்ருகிவிடும்' என்று கூறினல், இன்பத்தைத் தருகின்ற பொருளும், அவ் வின்பத்தை நுகர்கின்ற பொருளும் இல்லையாகிவிடும். அவ்வா ருயின், முத்தியினல் ஒருபயனும் இல்லையாம்; இனி, 'சிவமும் உயிரும் இரண்டாகவே இருக்கும்' என்று கூறினல், 'இரண்டறக் கலத்தல்' என்ற பேச்சுக்கே இடம் இல்லை; ஆகையால், பரமுத்தி நிலையில் சிவமும் உயிரும் ஒன்றுமாகாது, இரண்டுமாகாது இருக்கும் என்பதே இங்குச் சொல்லப்படுவது.

சிவமும் உயிரும் ஒன்றுமாகாமல் இரண்டுமாகாமல் இருப்பது எவ்வாறு? என்பதற்கு, "**தாடலைபோல்**" எனற ஓர் உவமையைத் திருவருட் பயன் எடுத்துக் காட்டுகின்றது. அந்தக் குறட்பாமேலே தரப்பட்டது. 'தாள், தலை' என்ற இரண்டு சொற்கள் சேர்ந்து? 'தாடலை' என நிற்கின்றன. தாள் - பாதம்.

ஒருவனுடைய அடியின்மேல் மற்ருெருவன் தன் தலையைத் தாழ்த்தி வணங்குவானுயின், அங்ஙனம் வணங்கினவன், தனக் கென ஒரு செயலும் இல்லாது, வணங்கப்பட்டவனது உடைமை யாகிவிடுகின்ருன். அப்பொழுது அவ்வுடையவனது செயலே இவனுக்கும் செயலாவதன்றி, இவனுக்கென்று ஒரு தனிச் செயல் இல்லை. இந்நிலையில், 'உடையவனும் அடியவனும் ஒருவரோ? இருவரோ? என்று நோக்கினல், ஒருவரும் 'அல்லர்' இருவரும் அல்லர். ஏன்? உடையவன் எப்பொழு தும், உடையவனே; அடியவன் எப்பொழுதும் அடியவனே; உடையவன் அடியவனுகான்; அடியவன் உடையவன் ஆகான்' ஆகையால், உடையவனும் அடியவனும் எப்பொழுதும் ஒருவ ராகார் என்பதாகின்றது.

"உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையேன் அடிமை கண்டாய் போற்றி"

என்று உடையவன் நிலையையும், அடியவர் நிலையையும் விளக்கு கின்றது திருவாசகம். ஆயினும, அடியவன் நீர் வழிப்பட்ட

புணேபோல, உடையவன் வழிப்பட்டே நிற்பதால், அவர்கள் இருவரல்லர் என்பதும் பெறப்படுகின்றது. இவை, 'தாடலே' என்ற உவமையால் உய்த்துணரக் கிடப்பனவாம்.

இனி இவ்வுவமையில் வெளிப்படையாக விளங்கும் பொருள் பின்வருவது, 'தாள், தலே' என்னும் இரண்டு சொற்கள் சேரும் பொழுது, தமிழ் இலக்கண முறைப்படி, 'தாடலே' என்று ஆகும். இத் 'தாடலே' என்பதில் உள்ள சொற்கள் ஒன்ருே? இரண்டோ? என்று ஆராய்ந்தால், 'தாள் (பாதம்), என்ற ஒருபொருளேயும், 'தலே' என்ற ஒரு பொருளேயும் ஆக இருபொருள்களேத் தருவதால், இதில் உள்ள சொற்கள் ஒன்றும் அல்ல,' தாள் என்றும். 'தலே' என்றும் பிரிந்து நான்கெழுத்தாய் நில்லாமையால், இரண்டும் அல்ல. இவ்வாறுதான் முத்தி நிலேயில் சிவம் இன்பத்தைத் தருவதும், உயிர் அவ்வின்பத்தைத் துய்ப்பதுமாய் இருத்தலால் ஒன்றும் அல்ல; உயிரினது அறிவு இச்சை செயல்கள் சூரியனது ஒளியின் முன்னே நிற்கின்ற விளக்கின் ஒளிபோல, சிவத்தினது அறிவு இச்சை செயல்களில் அடங்கி வேறு காணப்படாது நிற்பதால் இரண்டும் அல்ல. ஆகவே, முத்தி நிலேயில் சிவமும் உயிரும் பொருள் தன்மையால் இரண்டாய், கலப்பினுல் ஒன்ருய், ஒன்றுமாகாது, இரண்டுமாகாது நிற்கும். இதுவே சித்தாந்த முத்தி நிலே. இதற்கு' 'தாடலே' என்ற உவமையைக் காட்டி விளக்குவது, 'திருவருட்பயன்' என்னும் நூலே. சித்தாந்த முத்திநிலே ஒன்றுமாகாது இரண்டுமாகாது நிற்றல்' என்பதையே, சம்பந்த சரணுலயர், "ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மை" என்ற பாடலில், "சிவானந்த வாரியுள்ளே ஒன்றும் இரண்டும் அறத்தோய்வார் கமலேயுள் ஞானப்ரகாசன் மெய்த்தொண்டர்களே" என்று கூறினர்.

'தோய்தல்' என்பது, சித்தசலனம் அற்றுச் சிவத்தில் அழுந்தியிருத்தல், அதற்குக் குருமூர்த்திகள் வைத்த நிலேயில் அசையாது நிற்றல் வேண்டும். அங்ஙனம் நில்லாதவர்க்குச் சித்த சலனம் உண்டாகவே செய்யும். "குருவருளால் - வைத்த படியிருக்க மாட்டாத மாந்தர்க்குச் - சித்தசல னம்மாந் தினம்". என்பது சிவபோகசாரம்.

'இம் முத்தி நிலையை இவ்வுடம்பு உள்ள பொழுதே பெறலாம்' என்பதே சித்தாந்தத்துணிபு. அதற்குக் குருவின் உபதேசம் பெற்றவர்கள் நிட்டைநிலை நீங்காதிருத்தற் பொருட்டுத் திருவைந்தெழுத்தை ஓதுதல் வேண்டும். இதனை விளக்கவே, 'அஞ்செழுத்தருள்நிலை' என்ற அதிகாரத்தை ஒன்பதாவதாக வைத்து, இறுதி யதிகாரமாகிய பத்தாம் அதிகாரத்தில் ,இம் முத்திநிலையைப் பெற்ற சீவன் முத்தர்களது தன்மையை, 'அணைந்தோர் தன்மை' எனக்கூறி முடிக்கின்றது திருவருட்பயன்.


இவ்வாறு, 'பதி, பசு, பாசம், அருள், ஆசான் மூர்த்தி, அவனது உபதேசம், அதன் பயனாகிய பாச நீக்கம், பேரின்பப் பேறு, திருவைந்தெழுத்து, சீவன் முத்தர்' என்ற எல்லாப் பொருள்களின் இயல்பையும் மிகச்சுருக்கமாகச் சொல்லி விளக்கும் இந்நூலைச் சித்தாந்த வேட்கையுடையார் அனைவரும் ஓதி உணர்வாராக.

தருமையாதீனக் குருபூஜை விழாவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளுதல்.

தருமையாதீனம், திருக்குவளை கும்பாபிஷேக விழாவில் :



யாககால முடிவில்
அண்ணாமலைப் பல்கலைக் கழக :இசைப் பிரிவுத் தலைவர்
திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் திருமுறை ஓதுதல்

தருமையாதீனம், திருக்குவளை கும்பாபிஷேக விழாவில் :



கடம் புறப்பாடு

# தமிழ் கூறு நல்லுலகம்

திரு. அ. கலியபெருமாள், எம். ஏ.,

(மலர் 23, இதழ் 7, பக்கம் 406 இன் தொடர்ச்சி)

தமிழ்நாட்டு நகரங்களுள் தலைசிறந்ததாகப் புகாரைக் கூறலாம். வெளிநாடுகளோடு தமிழகம் கொண்ட வாணிகத்தின் பெரும்பகுதி இப்பட்டினத்தின் வழியாகத்தான் நடைபெற்றது. "Cosmopolitic city" என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுதல் போன்று, வேறுபட்ட நாகரிகங்களோடு மொழி பெயர் தேயத்தார் பலரும் கூடிவாழும் நகராகச் சிறப்புப் பெற்றிருந்தது. இந்நகரின் செல்வச் சிறப்பை எதிர்நிறுத்திக் காட்டும் சிறந்த இலக்கியம் பட்டினப்பாலை. கரிகால் வளவனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்ட இந்நூலின் ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார், "முட்டாச் சிறப்பின் பட்டினம்" எனக் குறிக்கிறார். அக்காலத்தே பட்டினம் எனின் புகாரையே குறிக்கும் அளவிற்குப் பெருமையுற்றிருந்தது. உறையூரை "ஓடாப்பூட்கை உறந்தை" என்று இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் குறித்ததுபோல, இளங்கோவும்

> " பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
> பொதுவறு சிறப்பிற் புகார் "

என்று பட்டினத்தைச் சிறப்பிக்கின்றார். நடுக்கின்றி நிலைஇய அதன் சிறப்பைக்கண்ட அவர்,

> " பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
> வீங்குநீர் வேலி உலகிற் கவன் குலத்தோ
> டோங்கிப் பரந்தொழுகலான் "
>
> (மங்கலவாழ்த்துப்பாடல்)

என்று மனமாரப் போற்றுகின்றார்.

சோணாட்டிற்குப் பூம்புகார் அமைந்ததுபோல் வையைபாய் வளநாட்டிற்குக் கொற்கை விளங்கியது. மதுரை என்றதும்

தமிழ் நினைவுக்கு வருவதுபோல், கொற்கை என்றதும் குளிர் முத்துக்கள் நினைவில் ஒளிரும். தமிழகத்து முத்துக்களில் பெரும்பகுதி இங்கேதான் கிடைக்கிறது. உலகச் சந்தையில் கொற்கை முத்துக்களுக்கு ஒரு தனியிடம் உண்டு. மதுரைக் காஞ்சி ஆசிரியர் மாங்குடி மருதனுர் இவ்வூரை "நற்கொற்கை" என்று பாராட்டுகிருர். "முத்துப்படு பரப்பிற் கொற்கை" (நற்றிணை 23) என்ற அடியால் கொற்கையின் முத்துவளத்தை அறியலாம்.

மீன் பிடிக்கும் பரதவர்க்கு மெய்ம்முயற்சி இல்லாமலே முத்துக்கள் கிடைக்கின்றன. அவற்றைக் கொடுத்துத் தேறல் பெற்றுக் குடித்து மகிழ்கின்றனர். இத்தகு கொற்கையை,

"பன்மீன் கொள்பவர் முகந்த இப்பி
நாரரி நறவின் மகிழ் நொடைக் கூட்டும்
பேரிசைக் கொற்கை" (அகம் 296)

என்னும் அடிகள் நமக்கு அறிமுகப்படுத்துகின்றன.

சேரநாட்டின் வாணிகச் சிறப்பை எடுத்துக்காட்டுவன, முசிறியும் தொண்டியும். முசிறியைப்பற்றிப் புறத்திலே ஒரு பாடல். மீன்களை விற்று மாருகப்பெற்ற நெல்லைத் தோணிகளில் குவித்திருக்கின்றனர். மனைகளில் குவிக்கப்பெற்ற மிளகு மூட்டைகள் ஆரவாரம்மிக்க கரையினின்றும் பிரித்தறிய இயலாதபடி காண்பாரைக் கலக்கும். கலந்தந்த பொன்னுகிய பொருள்கள் கழிஇயங்கும் தோணிகளால் கரை சேர்க்கப்படும். இத்தகு சிறப்பினை உடையது, மலைப்பொருளும் அலைப்பொருளும் வருநர்க்கீயும் குட்டுவன் முசிறி.

"மீன்நொடுத்து நெற்குவைஇ
மிசையம்பியின் மனைமறுக்குந்து
மனைக்குவை இய கறிமூடையால்
கலிச் சும்மைய கரைகலக்குறுந்து;
கலந்தந்த பொற்பரிசம்
கழித் தோணியாற் கரை சேர்க்குந்து
மலைத் தாரமும் கடல்தாரமும்
தலைப்பெய்து வருநர்க்கீயும்
புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
முழங்குகடல் முழவின் முசிறி" (புறம் 343)

முழவுபோல் முழங்கும் முசிறியின் கடற்கரையில்; யவனரின் வேலைப்பாடமைந்த மரக்கலம் பொன்னோடு வந்து நிற்கிறது. எடுத்துவந்த பொன்னைத் தந்துவிட்டுத் தமிழகத்து மிளகை ஏற்றிச்செல்லும் காட்சி அகத்திலே தெரிகிறது.

" சேரலர், சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழுமுசிறி " (அகம் 149)

தொலையா நல்லிசைப் பொறையன் தொண்டி,

" செங்கோற் குட்டுவன் தொண்டி " (ஐங்குறு 178) என்றும்

" திண்டேர்ப் பொறையன் தொண்டி " (குறுந் 128) என்றும்

குறிக்கப்பெறுகின்றது. அலையின் இனிய ஒலியோடு கலந்து அயலது மத்தளம் முழங்கும் இன்னிசையை வீதிகள்தோறும் கேட்கலாம்.

" திரையிமிழ் இன்னிசை அளைஇ அயலது
முழவிமிழ் இன்னிசை மறுகுதொறும் இசைக்கும்
தொண்டி " (ஐங்குறு. 171)

நெய்தல் வளமும், நிலைபெற்ற மருத வளமும் உடையது தொண்டி. கடலிற் பிடித்த மீன்களைப் பரதவர் கரையில் குவித்திருக்கின்றனர். அதன்மீது பறக்க இயலாக் கிழநாரை அமர்ந்திருக்கிறது.

" வலைவர் தந்து கொழுமீன் வல்சிப்
பறைதபு முதுகுரு கிருக்கும்
துறைகெழு தொண்டி " (ஐங்குறு 180)

தொண்டியின் மருதவளத்தை,

" தொண்டி, முழுதுடன் விளைந்த வெண்ணெல்
வெஞ்சோறு " (குறுந். 210)

என்னும் கூற்று நமக்குத் தெளிவுபடுத்தும்.

குலைதாழ்ந்த தெங்கு ஒருசார்; பரந்துகிடக்கும் குறைவு படா வயல்கள் மறுசார். அயலிலே மலை வேலியாகிறது. அகன்ற கடற்கரை; தெளிந்த கழிகள், அங்கே ஒளிரும் பூக்கள். குறுங்கோழியூர் கிழார் காட்டும் தொண்டி இது.

> " குலை இறைஞ்சிய கோட்டாழை
> அகல்வயல் மலை வேலி
> நிலவுமணல் வியன்கானல்
> தெண்கழிமிசைச் சுடர்ப்பூவின்
> தண்தொண்டி " (புறம் 17)

இத்தகு நலங்களை உடைய காரணத்தால்தான் கவிஞர். தொண்டியைப் பெண்மை நலத்திற்கு உவமையாக்கிப் பாடினர்.

> " தொண்டி அன்ன என்நலம் " குறுங். (குறுங். 238)

என்று குன்றியனும்,

> " வளங்கெழு தொண்டி யன்ன இவள்நலனே "
> (அகம் 10)

என்று அம்மூவனாரும் பாடியுள்ளமை இன்பமூட்டுவதாம்.

நிலவளம்பெற்ற தமிழ்நாட்டை நீர்வளம் உடையதாகச் செய்யும் நதிகளாகத் தமிழ் வையையும், தண்டலைப் பொன்னி யும், தண்ணான் பொருநையும் விளங்கின. புலிவழங்கு நன்னிலத் தைப் புனல் நாடெனப் போற்றுமாறு செய்தது பொன்னி. குடமலையிற் பிறந்து குணகடலிற்கலக்கும் காவிரி இடைப்பட்ட நிலத்தை - சோழநாட்டைச்சொர்க்கமாக மாற்றியது, சோணாட் டையே "காவிரிபுரக்கும் நாடு" என்று பொருநராற்றுப் படையில் முடத்தாமக் கண்ணியார் சுட்டுதல் காண்க. பொன் கொழிக்கச் செய்வதால் காவிரி, பொன்னியெனப் பெற்றது என்ப. "பொன்கொழிக்கும் காவிரி" என்று கடியலூர் உத்திரங் கண்ணனாரும் பட்டினப்பாலையில் போற்றுகிறார்.

[தொடரும்]

# தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

( மலர் 23, இதழ் , 6 பக்கம் 340 இன் தொடர்ச்சி )

**4.** ஒருமை சுட்டிய பெயர்:

இது உயர்திணை அஃறிணை ஆகிய இருதிணையிலும் வரும் ஒருமையை உணர்த்துதலின் இப்பெயர் பெற்றது. ஒருமைசுட்டி வரும் ஒருமை இயற்பெயர், ஒருமைச் சினைப்பெயர், ஒருமைச் சினைமுதற்பெயர் ஆகிய மூன்றும் உயர்திணை, அஃறிணை ஆகிய இருதிணையிலும் வரும் ஒருமைக்கு உரியதாய் வரும் (29).

**5.** தாம் என்னும் விரவுப் பெயர்

இது இருதிணையிலும் வரும் பன்மையை உணர்த்தும். (30)

**6.** தான் என்னும் விரவுப் பெயர்:

இது இருதிணையிலும் வரும் ஒருமையைக் குறிக்கும் (31).

**7.** எல்லாம் என்னும் விரவுப் பெயர்:

இது இருதிணையிலும் வரும் பன்மையை உணர்த்தும். அது உயர்திணைக்கு வருகின்றபொழுது தன்மைப் பன்மைக் கல்லது, முன்னிலைப் பன்மைக்கும், படர்க்கைப் பன்மைக்கும் வராது (32, 33).

**8.** நீயிர், நீ என்பன:

இவை இருதிணைக்கும் உரிய பொதுப்பெயர்களாம். அவற்றுள் நீஎன்பது ஒருமையையும், நீயிர் என்பதுபன்மையையும்குறிக்கும். இவற்றை இருதிணை ஐம்பாலுள் இன்னபால் என அறியவேண்டின் சொல்லுவான் கருத்தினை ஒட்டியே அறிதல் வேண்டும் (34, 35, 36, 39).

ஒழிபு:- ஒருசார் 4 உயர்திணைப் பெயருக்கும், விரவுப் பெயருக்கும் எஞ்சி நின்ற இலக்கணம் கூறுகின்றமையால் ஒழிபு எனப்பட்டது.

ஒருவர் என்பது உயர்திணை இருபாலுக்கும் உரியதாய்ப் பலர்பாற் சொல்லொடு முடியும் இயல்புடையது. இதனையே,

"ஒருவர் என்பது உயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப" (பெய: 32)

என நன்னூலாரும் கூறுவாருயினர் (37, 38).

பெண்மகன் என்னும் னகர ஈற்றுப் பெண்பாற்சொல், வினை கொள்ளுமிடத்து பெண்பாற்குரிய வினையே கொள்ளும். (எ—டு) பெண்மகன் வந்தாள் எனவரும் (40).

செய்யுளுள்; ன், ள், ர், ய் என்பனவற்றை ஈறாக உடைய பெயர்களின் ஈற்றயலெழுத்து ஆகாரம் ஓகாரமாதலும் உடைத்து (வினையின்பாலும் இந்நிலை ஒக்கும்) (41).

கடுவன், முதுமகன், குமரி என்பன போன்ற அஃறிணைச் சொற்கள் உயர்திணைக்குரியவாய்க் காணப்படினும், செய்யுளில் கருப்பொருளைக் கூறுமிடத்து அஃறிணையின் மேற்றேயாகும். இவைகளில் உள்ள னகரங்கள் ஆண்மையை உணர்த்தாமையின் இவை விரவுப்பெயரின் பாற்படும் (42).

காளை, விடலை என்பனபோன்ற பெயர்கள் அஃறிணை யல்லாத பொருளை (ஆகுபெயராய்) உணர்த்தலான் இவை உயர் திணையைக் குறிக்கும் (43).

---


குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம்: நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்,

# சங்க இலக்கியங்களில் சமயம்

வித்துவான். திருமதி. ப. நீலா

கலித்தொகை நீலமேனி வாலிழை பாகனுகக் கடவுளைக் காண்கிறது, காட்டுகிறது;

பெருங்கடுங்கோ, இறைவனின் தாண்டவத்திற்கேற்ப உமை தாளமிடுகிருள் என்று பாடுகிருர்.

கொடுகொட்டி என்னும் கூத்தை ஆடும்போது சீர் என்ற தாளத்தினையும், பண்டரங்கம் ஆடும்போது தூக்கு என்ற தாளத்தினையும், காபாலமாடுங்கால் பாணி என்ற தாளத்தினையும் பார்வதி இடுகிருள் ; பாட்டைப் பாருங்கள்

" படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி ஆடுங்கால் கோடுயர் அகல்குறிக்
கொடிபுரை நுசுப்பினுள் கொண்டசீர் தருவாளோ
மண்டமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து
பண்டரங்க மாடுங்கால் பணையெழில் அணைமென்தோள்
வண்டரற்றும் கூந்தலாள் வளர் தூக்குத் தருவாளோ
கொலை உழுவைத் தோலசைஇ கொன்றைத்தார் அவள்புரள
தலையங்கைக் கொண்டுநீ காபால மாடுங்கால்
முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ "

சிவ பரத்துவமே யன்றியும் திருமாலின் சீரும் இந்த இலக்கியங்களில் பேசப்படுகிறது. பெரும் பாணுற்றுப்படை - என்ற நூலில் காஞ்சியிலுள்ள திருவெஃகா என்ற தலம் குறிக்கப் படுகிறது,

"காந்தளஞ் சிலம்பில் களிறு படிந்தாங்கு
பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்"

என்று அதனைக் காண்கிறோம்.

இன்னும்

> "நீல் நிற உருவின் நெடியோன் கொப்பூழ்
> நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த் தாமரை"

ஓரிடத்தில் உவமையாகப் பேசப்படுகிறது.

மதுரைக் காஞ்சியிலே அந்திக் காலத்துக்கு முன்னுக எடுத்த விழாவிலே பல தெய்வங்களுக்குப் பலி படைத்து வழிபட்ட மக்களைப் பார்க்கிறோம்.

சிவபிரானைத் தலைமையாகக் கொண்டு உள்ளிட்ட பல தெய்வங்களுக்குப் பலியூட்டி விழவெடுக்கிருர்கள்,

> நீரும் நிலனும் தீயும் வளியும்
> மாகம் விசும்போ டைந்துட னியற்றிய
> மழுவாள் நெடியோன் தலைவனுக
> மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
> வாடாப் பூவின் இமையா நாட்டத்து
> நாற்ற வுணவின் உருகெழு பெரியோர்க்கு
> மாற்றரு மரபின் உயர்பலி கொடுமார்
> அந்தி விழவில் தூரியங் கறங்க

இப்படிச் செய்யும் அந்திவிழாவில் பலவகை வாத்தியங்களும் ஒலிக்கின்றன என்று மதுரைக் காஞ்சி கூறுகிறது. சைவ வைணவப் பூசல்களைச் சங்க இலக்கியங்களில் காணமுடியாது. அவரவர் சமயப்படி கடவுளை வழிபட உரிமை பெற்றிருந்தனர். சங்க நூல்களுக்குப் பிறகு எழுந்த இலக்கியங்கள் எண்ணிலடங்கா. ஆனுல், அவைகளும் கடவுள் வழிபாட்டில் - சமய நெறியில் ஆழ்ந்த கொள்கைகளை உடையனவாய் மிளிர்கின்றன.

சங்க இலக்கியங்களுக்குப் பின்பு எழுந்த காப்பியமான சிலப்பதிகாரம் சமயம் பற்றி என்ன பேசுகிறது என்பதைக் கவனிப்போம். இயற்கையை வழிபட்ட மக்கள் — இயற்கையைப் போற்றிய மக்கள் உண்டு. ஞாயிறு, திங்கள் போன்றவைகளை இயற்கைக் கடவுளாக எண்ணி வழிபட்டனர். இதனுல்தான் போலும் காப்பியம் யாத்த இளங்கோவடிகள் திங்களை முதலில் போற்றத் தொடங்குகிருர். திங்களைப் போற்றுதும் - ஞாயிறு போற்றுதும் - மாமழை போற்றுதும் - என்று சோழனுடன் அவைகளை இணைத்துப் போற்றுகிருர்.

புகார்ப் பெரும் பதியில் பிறவா யாக்கையைப் பெற்ற பெரியோனின் கோயிலும், ஆறுமுகச் செவ்வேளின் அணிதிகழ் கோயிலும், வால்வளை மேனி வாலியோன் கோயிலும், நீலமேனி நெடியோன் கோயிலும் மாலை வெண்குடை மன்னவன் கோயிலும் இருந்ததாகக் கூறுகிறார். அடிகளின் தமையனாராகிய செங்குட்டுவன் சைவ சமயக் காவலனாக விளங்கினான் என்பதோடல்லாமல் பிறசமயங்களின் பாதுகாப்பாளனாகவும் இருந்தான் என்பதனைச் சிலப்பதிகாரத்தின் மூலம் அறிந்தின்புறுகிறோம்.

'செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவன்'

என்று செங்குட்டுவன் அழைக்கப்படுகிறான். அந்த வஞ்சி வேந்தனின் சமயப் பொதுமைக்கு ஒரு காட்டு. காவா நாவின் கனக விசயரை வெற்றிகொள்வான் வேண்டி வஞ்சியை விட்டுக் கிளம்புகிறது தமிழ்ப்படை -

நிலவுக் கதிர் முடித்த நீளிருஞ் சென்னி
உலகுபொதி உருவத்து உயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைவதற்காக

செங்குட்டுவனது வணங்காத்தலை வணங்கியது. சிவபிரானின் திருப்பிரசாதத்தைத் தலையிலே ஏற்றுக்கொண்டான். படை புறப்படத் தொடங்கியது. அந்த நேரத்தில் ஆடகமாடத்திலே அறிதுயில்கொள்ளும் திருமாலின் சேடத்தைக் கொண்டு வந்தனர் சிலர். என்னசெய்தான் தெரியுமா சேரன். சிவபெருமானின் சேவடிகளைச் சிரத்திலே கொண்டுள்ளமையால் திருமாலின் சேடத்தைத் தோளிலே அணிந்துகொண்டான்.

தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணிமணி புயத்துத்
தாங்கின னாகத் தகைமையிற் (செல்வுழி)

இவ்வாருக சமய வேறுபாடில்லாமல் தமிழர் அரசோச்சினர் என்பதனை இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன.

இயற்கை வாழ்வில் இறை உணர்வு மிக்கிருந்தது. இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நடத்திய அந்த மக்கள் எங்கும் இறைவன் தன்மையையே கண்டுகளித்தார்கள்.

சிலம்பில் காடுகாண் காதையில் மாங்காட்டு மறையோன் ஒருவன் வருகிறான். அவனிடம் மதுரைக்குச் செல்லும் வழி யாது என்று கோவலன் கேட்க - அவன் பதில் கூறுகிறான். இந்த நீண்ட சுரவழியைக் கடந்தால்

> பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய
> அறை வாய்ச் சூலத் தருநெறி கவர்க்கும்'–

சிவபெருமானின் சூலத்தைப் போல மூன்றுவழிகள் பிரியும் - நடுவழியாக மதுரையை அடையலாம் என்று விடையிருக்கிறான். இறை உணர்வு எப்படி இயற்கையாக ஒன்றியுள்ளது பாருங்கள்.

சங்க கால மக்களின் வாழ்வில் சமயப்பூசலில்லை. சமயப் பாதுகாப்பு நன்முறையில் இருந்தது என்பதையே சங்க இலக்கியங்கள் மூலம் நாம் உணர்கிறோம்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

இப் பழம்பெரும் கோயிலில் ஆண்டவனை அமைதியாகத் தரிசனம் செய்யும் பெரும்பேறு இன்று எனக்கும் என் குடும்பத்தினருக்கும் கிட்டிற்று. எங்கு நோக்கினும் தூய்மையான தோற்றமளிக்கும் இவ்வாலயத்தின் நிர்வாகிகளுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

(Sd.) கா. வெ. நரசிம்மன்,

6—6—64. போலீஸ்துறை துணைத்தலைவர், திருச்சி.

# சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 23, இதழ் 7. பக்கம் 410 இன் தொடர்ச்சி )

सद्यं पश्चिम कुण्डेतु श्वेतवर्ण समद्युतिम् ।
हृद्विह्नेरिमे ध्यात्वा त्रिणेत्राश्च चतुर्भुजाः ॥ 364

वरदाभय संयुक्ताष्टंक शूलसमन्विताः ।
सर्वाभरण संपूर्णाश्वेत वस्त्रं च धारिणः ॥ 365

வெண்மையான காந்தியுடைய சத்யோஜாதம் என்ற மந்திர மூர்த்தியை மேற்கிலுள்ள குண்டத்திலும் பூஜிக்கவேண்டும். அதாவது அந்தந்தக் குண்டங்களில் ஆவாஹனம் செய்யப்பட்ட ஆஹவனீயம் முதலிய அக்னிதேவரின் ஹ்ருதய கமலத்தில் தத்புருஷம் முதலிய பஞ்சப்பிரம்ம மந்திரமூர்த்திகளைத் தியானிக்க வேண்டும். அவர்கள் மூன்று கண்களை யுடையவர்களாயும் நான்கு கைகளுடன் கூடியவர்களாயும், வரம், அயம், டங்கம், சூலம், இவைகளுடன் கூடியவர்களாயும், நிறைந்த ஆபரணம் பூண்டவர்களாயும் வெண்மையான வஸ்திரம் தரித்தவர்களாயும் இருப்பதாக நினைத்துப் பூஜிக்கவேண்டும். இவ்வாறு ஹ்ருதயம் முதலிய ஷடங்கமந்திரங்களையும் அந்தந்த திக்குகளில் பூஜிக்க வேண்டும்.

हृदयं श्वेतवर्णाभाग्नेयां दिग्स्थकुण्डके ।
ईश कुण्डे यजेद्विद्वान्पीताभ्रं च शिरोऽच्यते ॥ 366

शिखां नैऋति दिग्भागे श्याम वर्णसमद्युतिम् ।
कवचं धूम्रवर्णाभं वायुकुण्डेन्यसेत्बुधः ॥ 367

नेत्रं च श्यामलाकार मस्त्रं च कृष्ण सन्निभम् ।
द्वयं च शिव कुण्डेतु विन्यसेद्देशिकोत्तमः ॥ 368

வெண்மையான வர்ணமுடைய ஹ்ருதயம் என்ற மந்திரத்தைத் தென்கிழக்கிலுள்ள குண்டத்திலும் பொன்வர்ணமுடைய சிரஸ் என்ற மந்திரத்தை வடகிழக்கிலுள்ள குண்டத்திலும் பச்சை வர்ணமுடையதான சிகை என்றமந்திரத்தைத் தென்மேற்கிலுள்ள குண்டத்திலும், புகைவர்ணமுடையதான கவசம் என்ற மந்திரத்தை வடமேற்கிலுள்ள குண்டத்திலும் நிசிக்கவேண்டும் (அதாவது பூஜிக்கவேண்டும்) கரிசல் நிறமுடைய அஸ்திர மந்திரத்தையும், கருப்பு வர்ணமுடைய நேத்திர மந்திரத்தையும் ப்ரதான குண்டத்திலும் தியானித்துப் பூஜிக்கவேண்டும்.

हृदयाद्यस्त्र पर्यंतास्त्रिणेत्राश्च चतुर्भुजाः ।
पाशशूलं वराभीति पीतांबरधरा इमे ॥ 369

सदाशिव स्वरूपाश्च ज्ञातव्याश्शैव पारगैः ।
तत्तत्कुण्डे इमेन्यस्यास्तत्बाह्ये वसवस्तथा ॥ 370

तत्बाह्ये मरुतश्चैव लोकपालाश्चतत्बहिः ।
लोकपालैर्विहीना चेत् मध्यमं होममीरितम् ॥ 371

ஹ்ருதயம் முதல் அஸ்திரம் வரையிலுள்ள ஷடங்க தேவர்கள் யாவரும், மூன்று கண்ணுடையவர்களாயும் நான்கு கைகளை யுடையவர்களாயும், பாசம், சூலம், வரம், அயம் என்ற ஆயுதம் தரித்தவர்களாயும் பீதாம்பரமணிந்தவர்களாயும் சதாசிவ வடிவ முள்ளவர்களாயும் தியானிக்கத் தக்கவர்களாவார்கள், இவ்வாறு அந்தந்த குண்டத்தின் நடுவில் பூஜித்துக் குண்டத்தின்வெளியில் (மேகலைகளில்) எட்டு வசுக்களும், எட்டு மருத்துக்களும் அதற்கு வெளியில் லோகபாலர்களும் பூஜிக்கப்படவேண்டும். லோகபால பூஜை இல்லாதஹோமம் மத்தியமமாகும்.

मरुद्भिर्वसुभिर्हीनाः कन्यसं परिचक्षते ।
कुण्डाधिदेवता स्सर्वाः कुण्डमध्येन्यसत् गुरुः ॥ 372

पाद्यादिदीपपर्यन्तमर्चयेद्विधिना गुरुः ।
हस्तेकमान कुण्डेतु जुहुयात्सर्पिषा गुरुः ॥ 373

सहस्राधिक संख्याकान्यूनं वै नाधिकं हुनेत् ।

எட்டு வசுக்களையும், அஷ்ட மருத்துக்களையும் பூஜிக்கப் படாத ஹோமம், கடைசித் தரமாகும், குண்டத்தினதிதேவர்கள் யாவரும் குண்ட மத்தியில் பூஜிக்கவேண்டும். இவ்வாறு பூஜித்து பாத்திய முதலாக தீபாந்தரமாகப் பூஜையை முறைப்படி செய்ய வேண்டும், ஒருமுழ சதுரமான குண்டத்தில் ஆசாரியன் ஆஜ்யத் தினால் ஆயிரம் ஆவர்த்திஹோமம் செய்யலாம். அதற்கு அதிக மாகவோ குறைவாகவோ ஹோமம் செய்தல் கூடாது.

प्रतिकालं हुनेदिद्धं दशांश सर्पिषः क्रमात् ॥ 374

पलाश चरुलाजैश्च होमं कुर्यात्प्रधानके ।
अन्यानि समिद्द्रव्याणि पंचविंशति संख्यया ॥ 375

இவ்வாறு ஒவ்வொரு காலம்தோறும் ஹோமம் செய்ய வேண்டும் அப்படி செய்யப்படும் ஆஜ்ய ஹோமத்தினின்றும் தசாம்ச ஹோமமாக மற்றைய சரு, பலாசம் லாஜம் இவைகளின் ஹோமம் இருக்கவேண்டும் (சரு என்பது ஹவிஸ், பலாசம் பொரசு ஆயினும் அதற்கு விஹிதமான சமித், லாஜம் என்பது பொரி) மற்றுமுள்ள சமித்து திரவியங்களை இருபத்தைந்து என்ற எண்ணிக்கையில் ஹோமம் செய்யவேண்டும்.

शिवकुण्डे हुनेदेवं ऋत्विकुण्डेऽथतः परम् ।
पूर्वादीशानकुण्डान्तं यजेत्बृंह षडंगकान् ॥ 376

प्रतिकुण्डं धृतं हुत्वा पञ्चाशत् द्विशताधिकम् ।
तदर्धं समिधाहुत्वा चरून् तत्संख्यया तथा ॥ 377

तत्तत्कुण्डोक्त द्रव्याणि हुत्वापूर्वोक्त संख्यया ।
अन्यद्रव्याणि सर्वाणि यथा लाभं हुनेत्गुरुः ॥ 378

இம்முறைப்படி ப்ரதான குண்டமான சிவகுண்டத்தில் ஹோமம் செய்து கிழக்கு முதலிய திக்குகளிலிருக்கும் ருத்விக்கு களால் ஹோமம் செய்யப்படும் அஷ்ட குண்டங்களிலும் பஞ்சப் பிரும்ம ஷடங்கமந்திரங்களை ஹோமம் செய்யவேண்டும். அம் மந்திரங்களை ஆஜ்யத்தினால் ஒவ்வொரு குண்டத்தில் அந்த அந்த மந்திரம் சொல்லி இருநூற்றைம்பது ஆவர்த்திஹோமம் செய்து, அதன் பாதியளவு சமித்தும் அதுபோல் சருவும்

ஹோமம் செய்யவேண்டும். அந்தந்தக் குண்டத்திற்கு விசேஷமாகக் கூறப்பட்ட சமித்து தான்யம் முதலியவைகளையும் முன் கூறிய அளவில் ஹோமம் செய்யவேண்டும். மற்ற விசேஷத் திரவியங்களைக் கிடைத்த அளவு ஹோமம் செய்யலாம்.

कपिलायाघृतं श्रेष्ठं मिश्रधेनोश्च मध्यमम् ।
मेषाज्यं कन्यसंप्रोक्तं माहिषं वर्जयेत् घृतम् ॥ 379

सहस्रंवा त्रिपादंवा सहस्रार्धमथापिवा ।
उत्तमादिक्रमेणैव प्रधाने होमयेत्गुरुः ॥ 380

दिग्विदिक्षु च कुण्डेषु पञ्चब्रह्म षडंगकान् ।
प्रधा- होमसंख्याश्चार्धार्धं होममाचरेत् ॥ 381

காராம் பசுவின் நெய் உத்தமம், மற்றய சாதாரண பசுக்களின் நெய் நடுத்தரம் மேஷத்தின் நெய் அதமம், மாஹிஷத்தின் நெய் கூடவே கூடாது. (ஆட்டின் நெய் அதமபக்ஷத்தில் இவ் வாகமத்தில் காணப்படுகிறதாயினும் சம்பிரதாய விருத்தமானதால் தள்ளப்பட்டது) ஆயிரம் ஆவர்த்தி ஹோமம் செய்ய முடியாத பக்ஷத்தில், ஐநூறு அல்லது முன்னூறு ஆவர்த்தி ஹோமம் செய்யலாம். கிழக்கு முதலிய திக்குகளிலும் தென் கிழக்கு முதலிய விதிக்குகளிலுமிருக்கும், உப குண்டங்களில் பஞ்சப்பிரும்ம ஷடங்க தேவதைகளைக்குறித்து செய்யப்படும் ஹோமமானது ப்ரதான அக்னியில் செய்யப்படும் ஹோமத்தின் பாதி எண்ணிக்கையாலோ அல்லது பாதியின்பாதி எண்ணிக்கையாலோ ஹோமம் செய்யவேண்டும்.

प्रोक्तेतरादि देवानां होम मावरणात्मनाम् ।
प्रधानकुण्डे ज्ञेयंहि दशांशं होमसंख्यया ॥ 382

இங்குக் கூறப்பட்ட மூர்த்திகளைத் தவிர மற்றய ஆவரண தேவதைகளுக்கு ப்ரதான குண்டத்தில் ஹோமம் செய்ய வேண்டும். அந்த ஹோமத்தின் எண்ணிக்கையும், தசாம்சமாக இருக்கவேண்டும். (தசாம்சஹோமம் என்பது நூற்றில் ஒரு பங்கு ஹோமம் ஆகும்)

[ தொடரும் ]

# திருக்கோளிலி

வித்துவான். திரு. மு. இரத்தின தேசிகர்

தமிழ்நாடு-தவத்திருநாடு-தெய்வநெறி தழைக்கும் திருநாடு. சைவசமயக் குரவர்களால் பாடப்பெற்ற பலகற்றளிகளைக் கொண்டநாடு. வைப்புத் தலங்கள் பல மாண்புடன் திகழப்பெறும் நாடு. தில்லை எல்லையில் சிதலை தின்ற ஏடுகளை இழந்தும் தெய்வ ஒளியை இழக்காது விளங்கும் பல கோயில்களைக் கொண்ட நாடு. ''தென்னாடுடைய சிவனே போற்றி'' என்று மாணிக்கவாசக சுவாமிகளால் ஏத்தெடுக்கப் பெற்றநாடு. இத்தகைய தமிழ் நாட்டில் வான் பொய்ப்பினும் தான் பொய்யாது பரந்தொழுகும் தெய்வக் காவிரி நதியின் இருமருங்கும் அமைந்த சிவத்தலங் கள்பல. அவற்றுள் காவிரியின் தென்பால் அமைந்த தலங்கள் நூற்றிருபத்தேழு ஆகும். இந்நூற்றிருபத் தேழு தலங்களுள் திருக்கோளிலியும் ஒன்றாகத் திகழ்கின்றது.

இத்தலம் திருவாரூர் திருத்துறைப்பூண்டி கற்சாலையில் அமைந்துள்ள கச்சனம் எனவழங்கப்பெறும் கைச்சின்னம் என்ற தலத்திற்குத் தென்கிழக்கே 4 கல்தொலைவில் அமைந் துள்ளது. திருவாரூர் தலைஞாயிறு பேருந்துவிற் செல்வோர் இதனை அடையலாம். இத்தலத்திற்குத் தெற்கே ஒன்றரைகல் தொலைவில் எட்டிகுடி என்ற முருகத்தலம் விளங்குகின்றது. எட்டிகுடிக்குக் கிழக்கே 1 கல் தொலைவில் திருவாய்மூர் என்ற தலம் விளங்குகிறது. தலமூர்த்தியின் பெயர் கோளிலிநாத ஈஸ்வரர். அம்பிகையின் பெயர் வண்டமர் பூங்குழலம்மை. இது சப்தவிடங்க தலங்களுள் ஒன்று. திருக்கோளிலி என்ற பெயர் இன்று திரிந்து திருக்குவளை என வழங்கப்பெறுகின்றது. கோள் என்றசொல் நவக்கிரகங்களை உணர்த்துவதாகும். இத் தலத்தை வழிபட்டார் நவக்கிரகங்களால் அவதியுறார் என்ற காரணத்தால் கோள் - இல்லி - கோளில்லி - கோளிலி என வழங் கப்பெறுகின்றது.

''கோளாய நீக்குமவன் கோளிலியெம்பெருமானே'' என்பது திருஞானசம்பந்தப்பெருமானின் திருவாக்கு - இதற்குச் சான்றாக இன்னும் இத் தலத்தே நவக்கிரக மூர்த்தங்கள் வக்ர நிலையில் இன்றி ஒரே வரிசையில் உள்ளதை உணரலாம்.

கோயில் ஊரின் மேல்புறமாக அமைந்துள்ளது கோயிலுக்குக் கிழக்கு வாயில் ஒன்று மட்டும் உண்டு. கோயிலின் வடக்கு மதிற் சுவரை ஒட்டித் தருமையாதீனக் கட்டளைமடம் உள்ளது. தெற்கு மதிற்சுவரை ஒட்டிச் சிறந்ததொரு நந்தவனம் உள்ளது. பிரமதீர்த்தம் கோயிலுக்கு எதிரில் உள்ளது. கோயிலின் உள்ளே இரண்டு சுற்றுகள் அமைந்துள்ளன. முற்சுற்று சற்றுப்பெரியது. முதற் சுற்றிலேயே ஸ்ரீகோளிலிநாதருக்குமுன்பாகக் கொடிமரம், பெலிபீடம், நந்திமேடை ஆகியவை உள்ளன. முதற் சுற்றின் வடகிழக்குப் பகுதியில் தெற்கு நோக்கிய வசந்த மண்டபம் உள்ளது.

கோயிலின் நேரே உள்ளே சென்றவுடன் கோளிலிநாதர் சந்நிதியை அடையலாம். கோளிலிநாதருக்கு வலதுபுறமாக ஸ்ரீ தியாகராஜப் பெருமான் வீற்றிருக்கிறார். ஸ்ரீ தியாகராஜப் பெருமானுக்கு எதிரில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் உற்சவ மூர்த்தம் உள்ளது. தெற்குச் சுற்றில் திருமாலையறை முதலியன உள்ளன. மேற்குச் சுற்றில் விநாயகர், சுப்பிரமணியர், கலைமகள், திருமகள் முதலியோர் சந்நிதிகள் உள்ளன. ஸ்ரீகோளிலிநாதருக்கு இடதுபுறமாக கிழக்கு நோக்கிய ஸ்ரீவண்டமர் பூங்குழலம்மை திருக்கோயில் தனிக்கோயிலாக அமைந்துள்ளது. வடகிழக்குப் பகுதியில் ஒருவரிசைப்பட்ட நவக்கிரக மூர்த்தங்கள் உள்ளன. அடுத்து கூத்தப்பிரானின் சந்நிதி உள்ளது. கோயிலின் அமைப்பு மன அமைதியைத் தரும் ஒரு தெய்வீக நிலையில் உள்ளது,

இத்தலத்தில் சிறந்த மூர்த்தியாக விளங்குபவர் ஸ்ரீ தியாகராஜமூர்த்தியே ஆவர். இவர் அவனிவிடங்கர் என்று அழைக்கப்பெறுகின்றார். சப்தவிடங்கத் தலங்களுள் முதன்மை பெற்று விளங்கும் திருவாரூர்த் தியாகர் வீதிவிடங்கர் என்றும், திருநள்ளாற்றில் நகவிடங்கர் என்றும், நாகையில் சுந்தர்விடங்கர் என்றும் திருக்காராயிலில் ஆதிவிடங்கர் என்றும், திருவாய்மூரில் நீலவிடங்கர் என்றும் திருமறைக்காட்டில் புவனிவிடங்கர் என்றும் அழைக்கப்பெறுகின்றனர். திருவாரூர்த் தியாகேசர் ஆடும் நடனம் அஜபா நடனமெனப்பெறும். ஜபிக்கப்பெறாத நடனம் என்பது இதன் பொருள். மந்திரங்களை ஓதும் பலமுறைகளில் மானசீகமாக உச்சரிப்பது ஒருமுறை. இந்த முறையில் திருமால் ஸ்ரீ தியாகராஜபெருமானைத் தமது மார்பகத்தில் வைத்துப் பூசித்தஞான்று மானசீகமாகப் பெருமானது திருப்பெயரை உச்சரித்த காலத்தில் நடனமாடிய முறையையே இது குறிக்கின்

தருமையாதீனம், திருக்குவளை கும்பாபிஷேக விழாவில் :



கும்பாபிஷேகம் முடிந்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்திலும்
மதுரை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திலும்
கட்டளை படத்துக்கு எழுந்தருளல்

தருமையாதீனம், திருக்குவளை கும்பாபிஷேக விழாவில் :



ஸ்ரீ அவனிவிடங்கத் தியாகேசன் நடனம்

றது. உள்மூச்சு வெளிமூச்சுகளால் மார்புக்கூடு ஏறி இறங்குவதாலும்; அம்மூச்சு உள்ளும் புறமும் முன்பின்னாக இயங்குவதாலும் அஜபா நடேசராகத திருமாலின் இதயகமலத்தில் அமர்ந்து ஸ்ரீ தியாகராஜர் மேலும் கீழுமாக ஏறியிறங்கியும் முன்னும் பின்னுமாகச் சென்றுவந்தும் ஆடிய ஆட்டம் இப்பெயர் பெறுவதாயிற்று. இவ்வரிய காட்சியினை இன்னும் திருவாரூரை அடைந்து ஸ்ரீ தியாகராஜப்பெருமான் ஆடுங்காலங்களில் கண்டுகளிக்கலாம். திருநள்ளாற்றில் உந்மத்த நடனத்தைக் காணலாம்; இந்த நடனம் பித்தன் தலைசுற்றி ஆடுவது போல் நிகழ்வதொன்றாகும். நாகையில் பாராவாரதரங்க நடனத்தைக்காணலாம். இது கடல் அலையின் அசைவை ஒத்துள்ளது. திருக்காராயிலில் குக்குட நடனத்தைக் காணலாம். இது கோழியின் ஆட்டத்தை ஒத்தது. திருக்கோளிலியாகிய இப்பதியில் ஸ்ரீ தியாகராஜப் பெருமான் பிருங்க நடனம் ஆடுகின்றார். வண்டு மலர்களுக்குள் குடைந்து ஆடிச்செல்வது போன்ற காட்சியை இந்நடனத்தில் காணலாம். திருவாய்மூரில் நிகழ்வது கமல நடனம் நீர் நிறைத்த தடாகத்தே ஒற்றைத் தாளில் நிற்கும் தாமரைப்பூ காற்றால் தள்ளுண்டு மெல்லன ஆடுவது போன்ற இனிய காட்சி இதன்கண் உள்ளது. திருமறைக்காட்டில் ஹம்ஸபாத நடனம் நிகழ்கின்றது, இது அன்னப்பறவை அடிபெயர்த்துவைத்து ஆடுவது போன்ற தோற்றத்தினை உடையது.

" சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காராயில் — பேரான
ஒத்ததிரு வாய்மூர் உகந்ததிருக் கோளிலி
சத்தவி டங்கத் தலம். "

என்பது ஓர் பழஞ்செய்யுள்.

## ஸ்ரீ தியாகராஜப்பெருமான் வரலாறு :

ஸ்ரீ சோமாஸ்கந்த மூர்த்தியே ஸ்ரீ தியாகராஜப்பெருமான் என்றும் அழைக்கப்பெறுகின்றார். ஸ்ரீ சோமாஸ்கந்தமூர்த்தி ஆதிதோற்றம் கந்தபுராணத்துள் காணப்பெறுகின்றது. சரவணப்பொய்கையில் கலந்த ஆறு தீப்பொறிகளும் ஆறு குழந்தைகளாக மாறுகின்றன. கார்த்திகைப் பெண்கள் அறுவரும் வந்து பாலூட்டி அக்குழந்தைகளை வளர்க்கின்றனர். இந்த நிலையில் திருக்கயிலையினின்றும் இறைவன் உமாதேவியோடு விடையின்மீது இவர்ந்து வந்து; சரவணத்து விளையாடிய தம்

குழந்தைகளை உமை அம்மைக்குக் காட்டுகின்றார். உமைஅம்மை அவ்வாறு குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்து அணைக்கின்றார். ஒரு திருமுருகன் வந்து உதிக்கின்றான். உமை குழந்தையை உச்சிமோந்து சிவபெருமான் பால் அளிக்க இருவரும் அக் குழந்தையைத் தம் நடுவே அமர்த்தி சோமாஸ்கந்தராகக் காட்சி யளிக்கின்றனர். உமையோடும் கந்தனோடும் கூடிய இறைவன் என்பதே இத்திருப்பெயரின் பொருளாகும்.

பிருதுவி பஞ்ச பூதங்களில் ஐந்தாவது. இதுவே அனைத்தின் தோற்றத்திற்கும் ஆதாரமானது. பஞ்சபூத தலங்களுள் திருவாரூர் பிருதுவி தலமாகும். இங்கு இருக்கும் ஸ்ரீதியாகராஜ மூர்த்தியும் அனைத்தின் தோற்றத்திற்கும் மூலாதாரமாக இருத்தலினால் தாம் திருவாரூர் விராட்புருடனுக்கு மூலாதாரத் தலமாக விளங்கி வருகின்றது. தியாகம் என்ற சொல் தன்னலமற்ற கொடையை உணர்த்துவதாகும். சோமாஸ்கந்தராகிய தியாக ராஜப்பெருமான் போககர்த்தாவாகத் திருவாரூரில் வீற்றிருந்து இம்மை இன்பத்தை அளித்து வருகிறார். சிதாகாசமாகிய ஐம் பூதங்களின் முதல் இடத்தில் நின்று நடிக்கும் நடராஜப் பெருமான் சிவகாமி அம்மையையும் இடப்பாகத்தே தனித்து நிற்கவைத்து ஞானானந்தப்பெருநடனம் புரிந்து ஆன்மக்கோடி களுக்கு வீட்டின்பத்தை அளிக்கிறார். அந்த ஆனந்தத் தாண்ட வத்தினை ஆன்மகோடிகள் கண்டுகளிக்க முடியாமையாற்றான் உமையம்மை கண்டு களித்து அதன் பயனைத் தன் குழந்தை களாகிய ஆன்மகோடிகளுக்கு வழங்குகின்றான். பிருதுவி விரிவு, ஆகாசம் ஒடுக்கம். ஏனைய சோமாஸ்கந்த வடிவங்களுக்கும் ஸ்ரீ தியாகராஜமூர்த்தியாகிய சோமாஸ்கந்தருக்கும் உள்ள ஒரு வேற்றுமை "முகத்தைக் காட்டியே தேகம் முழுவதும் காட்டாத மூடு மந்திரம்" ஒன்றுதான். தில்லையில் கூத்தப்பெருமானின் வலது புறச்சுவரில் இரகசியம் மூடிதிறக்கப்படுவதுபோல் ஸ்ரீ தியாகராஜரது மார்பில் இரகசியம் என்றும் மூடி மறைக்கப் பெற்றே உள்ளது.

"அருளும் மாண்பு அளப்பில கிளத்தல் வேண்டாம்" என்பது வேதவாக்காதலின் மேற்கொண்டு சிந்தனை செய்யாது விடுதலே நன்று.

முசுகுந்தன் :

கயிலை மலையில் இறைவனும் இறைவியும் ஒரு நந்தவனத்தில் வில்வ மரத்தின் அடியில் வீற்றிருந்தனர். அவ்வில்வ மரத்தில்

மேலிருந்த முசு ஒன்று வில்வத்தினைப் பறித்து கீழே இருந்த இருவர்மீதும் சொரிந்துகொண்டே இருந்தது. கூவிளம் சிறந்த பச்சிலை. இறைவனுக்கு ஆரா இன்பமளிப்பது. அதனை இடைவிடாது சொரிந்த அந்த முசுவினைப் பார்த்து இறைவன் கருணைபாலித்து "முசுவே நீ நம்மை வில்வத்தால் அபுத்தி பூர்வமாக வேனும் அருச்சித்தாய்; நீ மண்ணுலகில் சிறந்த வேந்தனாக இருந்து ஆள்வாயாக. என்று திருவாய் மலர்ந்தருளினார். இதனைக்கேட்ட முசு "ஐயனே மையல் மானுடனாய் வாழ நேரின் தங்கள் நினைவு எனக்கு இல்லாது போகும். எனது பழம் பிறப்பினை யான் என்றும் உணர்ந்திருக்குமாறு என்முகம் மட்டும் என்றும் முசுவின் முகமாக இருக்குமாறு அருள் பாலிக்க வேண்டும்" என வேண்டிற்று. இறைவனும் அவ்வாறே அருளினர். அது தென்தமிழ் நாட்டில் சோழ குலத்தில் வேந்தனாய்ப் பிறந்து முசுகுந்தனென்ற பெயருடன் கருவூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்தது.

வலாசுரன் போர்:- தேவருலகில் வலாசுரன் என்பவன் இந்திரனை எதிர்த்துப் பொருதான். இந்திரன் அவனுடன் பொர இயலாது மண்ணுலகத்திற்கு வந்து முசுகுந்தனின் உதவியை நாடினான். முசுகுந்தன் தன் படையுடன் விண்ணுலகடைந்து வலாசுரனோடு பொருதுவென்று இந்திரன் துயர் களைந்தான். இந்திரன் முசுகுந்தனுக்குச் சிறப்புகள் பல செய்து முசுகுந்தனுக்குத் தன்பால் உள்ள பொருள்களில் அவன் விரும்பியதைத் தருவதாகக் கூறினான். இந்திரன் திருமாலிடம் பெற்று நாடோறும் பூசித்துவந்த தியாகராஜப் பெருமானை முசுகுந்தன் தரிசித்து அகமகிழ்வெய்தினான். தியாகராஜப்பெருமான் முசுகுந்தனுடன் மண்ணுலகிற்குத் தான் எழுந்தருள விழையும் குறிப்பினை உணர்த்த; முசுகுந்தன் இந்திரனிடம் அவன் வழிபட்டு வரும் தியாகராஜப் பெருமானைத் தனக்குத் தரும்படி போற்றினான். முசுகுந்தன் தியாகராஜப்பெருமானைப் பிரியும் மனமின்றி "இப்பெருமானை எனக்கு அளித்தவர் திருமால் - அவர் விரும்பின் நீ பெற்றுச்செல்லாம் என்றார். முசுகுந்தன் திருமாலிடம் சென்று தன் கருத்தைத் தெரிவித்தான். திருமால் தியாகராஜப் பெருமானை அவன் பெற்றுச் செல்வதற்குச் சம்மதித்தார். மீண்டும் நிகழ்ந்ததைக்கூறி இந்திரனை வேண்டினான். இந்திரன் தான் வழிபடும் தியாகராஜரைப்போல் ஏனை ஆறு மூர்த்திகளை அமைத்து ஒவ்வொரு மூர்த்தியாக முசுகுந்தனிடம் தர "நான் வேண்டியவர் இவரல்லர் இவரல்லர்" என்று மறுத்துவந்தான். முடிவில் தியாகராஜப்பெருமான் முசுகுந்தனிடம் உள்நின்று

உணர்த்தியபடி செங்கழுநீர் மலரை அணிந்துள்ள உண்மைத் தியாகராசரைத் தந்தபொழுது "இவரே யான் வேண்டியவர்" எனக்கூறி இந்திரன் தர அவரைப்பெற்று மண்ணுலகத்திற்குக் கொண்டுவந்தார். திருமால் மார்பிலிருந்த தியாகரை-இந்திரன் பூசித்த தியாகரை - வீதி விடங்கத் தியாகரை திருவாரூரில் தாபித்துச் சிறப்பொடு பூசனை நடைபெறச் செய்தான். இந்திரன் ஏனைய ஆறு மூர்த்திகளையும் தர அம்மூர்த்திகளைத் திருவாரூரை அடுத்த நாகை முதலிய ஆறு தலங்களில் தாபித்தான். அப்படி தாபித்தபொழுது அவனிவிடங்கராகிய தியாகராஜப்பெருமானை இத்திருக்குவளையில் தாபித்தான்.

பாரதத்தில் திருக்கோளிலி :

இதிகாசங்களில் சிறந்தது பாரதம். வியாதமுனிவர் கூற விநாயகப்பெருமான் பாரதவரலாற்றைத் தன் ஒற்றைத் தந்தங் கொண்டு மேருமலையில் வரைந்தார் என்பது வரலாறு இப் பாரதக் கதையில் சிறந்து விளங்குபவர் பாண்டவர் ஐவர். இவருள் பீமன் பெருந்திறல் படைத்தவன். சிவபூஜா துரந் தரன். அவன் செய்வதெல்லாம் அந்தர்யாக பூஜையேதான். எங்கெங்கே நறுமணங்கமழும் நந்தவனங்களைக் காண்கிறானோ அங்கங்கே அந்த நந்தவனத்துள்ள மலர்களைச் சிவபரம்பொரு ளுக்கு அர்ப்பணம் செய்துவிடுவான். அம்மலர்கள் எல்லாம் கயிலையில் வீற்றிருக்கும் கண்ணுதற் பெருமான் திருவடிகளில் குவிந்து அந்தியும் பகலும் தொண்டர் சுமந்துசெல்லும் பெருஞ் சுமையாகிவிடும். இந்த பீமன் திருக்கோளிலிநாதரை வழிபட்ட வரலாற்றைக் காண்போம்.

துரியோதனன் சூழ்ச்சியிற் கட்டிய அரக்கு மாளிகையில் பாண்டவர் ஐவரும் தங்கியிருந்தனர். நள்ளிரவில் ; அரக்கு மாளிகைக்குத் தீயிட்டனர். இதையறிந்த வீமன் தாயுடன் உடன்பிறந்தாரைச் சுமந்துகொண்டு சுரங்கத்தின் வழியே வெளியேறுகிறான். ஒரு வனத்தில் இடும்பி என்ற அரக்கி வீமனை மணந்து கடோற்கசனைப் பெற்றாள். இதன் பின்னர் பாண்டவர் ஐவரும் வேத்ரகீயம் என்ற ஊரை அடைந்தனர் பாண்டவர்கள் தங்களை அந்தணச் சிறுவர்களாக உரு மாற்றிக் கொண்டு, அடைந்தபொழுது அவ்வூர் அந்தணர்கள் அவர்களை விருந்தினர்களாக வரவேற்றனர்.

பாண்டவர் ஐவரும் ஒரு அந்தணரது இல்லில் விருந்தின ராய் அமர்ந்தனர். வேத்திரகீயத்தின் ஊர்ப்புறத்தே பகாசுரன்

என்ற ஒரு அசுரன் வாழ்ந்து வந்தான். அவன் அவ்வூருள் புகுந்து மக்களைக்கொன்று தின்ருன். இதனைக்கண்ட அவ்வூரார் அவ்வசுரனை அணுகி, வணங்கி, "ஐயா! இப்படி இவ்வூரைத் தாங்கள் அழிக்கவேண்டாம். முறை வைத்து ஒரு வீட்டிற்கு ஒருவராய் நாள்தோறும் வந்து உனக்குப் பலியாகின்ருேம், அப்படி வரும்பொழுது ஒரு வண்டி நிறைய உணவினையும் கொண்டு வருகின்ருேம் என்று வேண்டினர். பகாசுரனும் அதற்கு இசைந்தான். இந்த முறைப்படி பாண்டவர் வாழ்ந்த அந்தணர் வீட்டு முறை ஒருநாள் வந்தது. அன்று பிரதை என்ற இல்லக்கிழத்தி பகாசுரனுக்கு இறையாகத் தன் வீட்டிலிருந்து யாரை அனுப்புவதென்று அறியாது திகைத்து அழுதுகொண்டிருந்தாள். இவள் நிலையினை அறிந்த குந்தி அந்தணச் சிறுவன் வடிவிலிருந்த வீமனை அனுப்ப ஒருபட்டாள். வீமனும் அவ்வாறே ஒரு வண்டியில் நிரப்பிய உணவுடன் பகாசுரன் இருப்பிடம் நோக்கிச் சென்ருன். பகாசுரனுக்கும் வீமனுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. முடிவில் பகாசுரன் கொல்லப்பட்டான். இதனல் வேத்திரகீய மக்கள் கவலையற்று வாழ்ந்தனர். இந்த பகாசுரனைக் கொன்றதனல் தன்னைவந்து பற்றிய பிரம்மஹத்தி தோஷத்தை வீமன் திருக்குவளைக்கு வந்து வழிபட்டுப் போக்கிக்கொண்டான் என்பது வரலாறு.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

I had the good fortune to visit this temple today, 27—5—64, and perform worship. I am very happy to find that the temple is maintained in an excellent condition, and the authority, are doing everything possible to maintain its rich tradition The management deserves all congratulation.

(Sd.) K. S. Ramamoorthi,<br>
27—5—64. Judge, High Court of Judicature,<br>
Madras.

# சித்தாந்த விஞவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

( மலர் 23, இதழ் 7, பக்கம் 394 இன் தொடர்ச்சி )

## இறைவனுக்கு உலகத்தோடு உள்ள தொடர்பு

மாணுக்கன் : அடிகளே, இறைவன் உயிர்களின் பொருட்டுக் கருணையினலே படைத்தல். காத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்கின்ருன் எனின், உயிர்களை அவ்வைந்தொழிலினுட்பட்டுச் செல்லுமாறு செலுத்துகின்ருன் என்பதன்ருே பொருளாகின்றது?

ஆசிரியர் ; ஆம் ; அதுதான் பொருள்.

மாணுக்கன் : அங்ஙனமாயின் இறைவன் உயிர்களை, அரசன் அமைச்சர் முதலியோரைச் செலுத்துதல்போல வேருய் நின்று செலுத்துகின்ருனே? அல்லது உயிர் உடலைச் செலுத்துதல் போல ஒன்ருய் நின்று செலுத்துகின்ருனே?

ஆசிரியர் : உயிர் உடலைச் செலுத்துதல்போல. ஒன்ருய், நின்றே செலுத்துகின்ருன்.

மாணுக்கன் : அப்படியாயின், உயிரும் உடலும் பொருளால் வேருய், கலப்பினுல் ஒன்ருய் இருத்தல்போல, இறைவனும் உயிர்களும் பொருளால் வேருய், கலப்பினுல் ஒன்ருய் இருக்கின்றனர் என்று அன்ருே சொல்லவேண்டி வரும்?

## இறைவனும் உயிர்களும்

ஆசிரியர் : ஆம் ; அப்படித்தான் - பொருளால் வேருய், கலப்பினுல் ஒன்ருய்த்தான் இருக்கின்றனர்.

மாணுக்கன் ; வேதங்கள் அப்படிச் சொல்லவில்லையே ; "சிவபிரான் ஒருவனே ; அவன் அத்விதீயமாய் உள்ளான்"

( एकोहि रुद्रो नद्वितीयाय तस्थुः - யஜுர்வேதம், சுவேதாசுவதரம்.) என்றும், "சத்தாகிய இதுவே முதற்கண் இருந்தது" ( सदेव सौम्येदमग्र आसीत् - சாந்தோக்யம்) என்றும், "பிரமப் பொருள் ஒன்றே; அஃது அத்விதீயம்" ( एकमेवाद्वितीयं ब्रह्म - ஷை ) என்றுந்தானே கூறுகின்றன! ஆகவே, இறைவனையும் உயிர்களையும், 'பொருளால் வேறு' எனக் கூறுதல் வேத விரோதம் ஆகுமன்றோ ?

ஆசிரியர் : 'இறைவனும், உயிர்களும் பொருளால் வேறே' எனக் கூறுதல் எவ்வாறு வேத விரோதமாகும் ?

மாணாக்கன் : "அத்விதீயம்" என்பதற்கு, இரண்டில்லாதது என்பதுதானே பொருள்! இரண்டில்லாதது ஒன்றுதானே! ஆகவே, 'எந்தப் பொருளும் இறைவனன்றிப் பொருளால் வேறல்ல' என்பதே வேதத்தின் முடிபாகிறது அன்றோ? "நின்தன்மை நினைப்பற நினைந்தேன் நீயலாற் பிறிதுமற் றின்மை" (திருவாசகம்) என்றாற்போலத் திருமுறைகளும், 'எந்தப் பொருளும் இறைவனையன்றிப் பொருளால் வேறல்ல' என்றுதானே, பலவிடங்களிலும் பலபடியாக முழங்குகின்றன! ஆகவே, உயிர்களையும் மற்றும் உலகங்களையும் இறைவனின் வேறான பொருள்கள் எனக் கூறுதல், ஏன் வேத விரோதமாகாது?

ஆசிரியர் : அஃதன்று ; சுருதியிற் சொல்லப்பட்ட பொருள்கள் யுக்தி அனுபவங்கட்கும் ஒத்தனவாய் இருக்குமன்றி, அவற்றிற்கு ஒவ்வாததாய் இராது என்பது அனைவர்க்கும் உடன்பாடு. ஆகவே, 'அத்விதீயம்' என்ற சொல்லுக்கு, 'இரண்டில்லாதது' எனப் பொருள்கொண்டு, இறைவனும் உயிர்களும் ஒன்றே; வேறல்ல' எனக் கூறினால், இறைவனும் உயிரும் வேறு' என்னும் உணர்வு மயக்க உணர்வாதல் வேண்டும்; ஆனால், 'இறைவனும் உயிரும் வேறு வேறு பொருள்கள்' என்ற உணர்வே பொதுவாக யாவர்க்கும் உண்டாகிறது. முதலில் இம்மயக்க உணர்வும், பின் இம்மயக்க உணர்வு நீங்க, 'இறைவனும் உயிரும் ஒன்றே' என்னும் உண்மை உணர்வும் உண்டாதல் யாருக்கு? இறைவனைத் தவிர வேறு பொருள் இல்லை என்றால், இம்மயக்க உணர்வு இறைவனுக்கு உண்டானதாகத்தானே ஆகும்? அவ்வாறு கொள்ளுதல் வேதத்திற்கு ஒருப்பாடாகுமோ? ஆகாதன்றே? அதனால், 'அத்வீதீயம்' என்பதற்கு, 'இரண்டில்லாதது' எனப் பொருள்கொள்ளல் பொருந்தா

தாகின்றது. இதனையே மெய்கண்டார், "அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னில், ஏகம் என்று சுட்டுவது உண்மையின், இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்கும்" என்று உரைத்தருளினர்.

மாணுக்கன் ; மயக்க உணர்வு இறைவனுக்கே உண்டானதாகக் கொள்ள வேண்டுவது இல்லை ; இது மாயையினிடத்தில் பிரதிபலிக்கின்ற ஒரு பிரதிபலனம் (எதிர் ஒளி) எனச் சிலர் கூறுகின்றனர்.

ஆசிரியர் ; அவ்வாருயின், உண்மையுணர்வும் பிரதிபலனத்திற்குத்தானே? அது நிற்க, 'மாயை' என்பது இறைவனுக்கு வேருனதுதானே? அப்பொழுது, 'இரண்டாவது இல்லை' என்றல் தவருய் முடிகின்றது அன்ருே?

மாணுக்கன் : 'மாயை' என்பது, 'இன்னது' எனச் சொல்லவாராத பொருள் ; ஆதலின், அஃது இறைவனுக்கு வேருய் உள்ள ஓர் உண்மைப்பொருள் அன்று என்கின்றனர்.

ஆசிரியர் : 'எல்லா விவகாரங்கட்கும் காரணம் மாயை' என்று சொல்லிவிட்டு, அதனை, 'உள்ளது என்றும் இல்லதென்றும் சொல்லஒண்ணுத பொருள்' எனக் கூறின், அது, 'பொருள் ஒன்றே ; இரண்டாவது இல்லை' எனக் கூறியதனைச் சாதிக்கமாட்டாத தோல்வித்தானமேயன்றிப் பிறிதில்லை, ஆகவே, 'அத்விதீயம்' என்பதற்கு, 'இரண்டில்லாதது' என்பது பொருளன்று.

மாணுக்கன் : மற்று அதன் பொருள் யாதோ? அதனை அருளல் வேண்டும்.

ஆசிரியர் : 'துவிதம்' என்பது, ஓர் எண்ணின் பெயர் ; அதன் முன்னே வருகின்ற நகாரம் ,அப்ரகாசம்' என்பதிற்போல இன்மைப் பொருளோ அல்லது 'அதர்மம்' என்பதிற்போல மறுதலைப் பொருளோ தாராது ; 'அப்ராமணன்' என்பதிற்போல, அன்மைப் பொருளே தரும். இதனை, 'அநேகம்' என்பதில் வைத்து உணரலாம். ஆகையால், 'அத்விதீயம்' என்பதற்கு, 'இரண்டல்லாதது' என்பதே பொருளாகும்.

மாணுக்கன் : இன்மைக்கும் அன்மைக்கும் உள்ள வேறுபாடு யாது?

ஆசிரியர்: இன்மை, முற்றிலும் மறுப்பது; அன்மை, சிறிது மறுத்துச் சிறிது உடன்படுவது; எடுத்துக்காட்டாக, 'சாத்தன் இல்லை' என்றால், 'அங்கு அவனோடு ஒத்தவேறொருவன் உளன்' என்னும் பொருள் எவ்வாற்றானும் தோன்றாது; ஆனால் 'சாத்தன் அல்லன்' என்றால், 'அவனோடு ஒருவாற்றான் ஒத்த வேறொருவன் உளன்' என்ற பொருள் தோன்றும்; அது போலவே, 'இரண்டு இல்லை' என்றால். 'அங்கு இரண்டு எனற்கு ஒத்தபொருள் உண்டு' என்பது எவ்வாற்றானும் பெறப்படாது; ஆனால், 'இரண்டு அல்ல' என்றால், அங்கு ஒருவாற்றான் இரண்டு எனற்கு ஒத்த பொருள்உண்டு என்பது பெறப்படும். இதுவே, இன்மைக்கும் அன்மைக்கும் உள்ள வேறுபாடு.

எனவே, 'இறைவன் இரண்டல்லன்' எனின், 'உயிர்கள் உலகம் என்பவற்றோடு முற்றிலும் வேறானவன் அல்லன்; ஒரு வாற்றான் ஒன்றாயும். ஒருவாற்றான் வேறாயும் இருப்பவன்' என்பது பொருளாகும். இதுவே. சித்தாந்தத்துள், 'இறைவன் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாயும், பொருட்டன்மையால் வேறாயும். உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாயும் நிற்பன்' என்றும், இவ்வாறு, 'அபேதம், பேதம். பேதாபேதம்' என்னும் மூன்று தன்மையும் ஒருங்கு தோன்ற, அம்மூன்றற்கும் பொது வாய் நிற்றலையே வேதம் அத்துவிதம் எனக் கூறுகின்றது என்றும் சொல்லப்படுகின்றது. இதனையே மெய்கண்டார். "அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை (பிரிப்பின்மையை) உணர்த்துமாறாயிற்று" என்று உரைத்தருளினார்.

இறைவன் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாய் நிற்றற்கு, 'உடலுயிர்போல்' என்றும், பொருட்டன்மையால் வேறாதற்கு, 'கண்ணருக்கன்போல் (கண்ணொளியும் சூரிய ஒளியும்போல)' என்றும், உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாதற்கு. 'கண்ணொளியும் ஆன்ம போதமும்போல்' என்றும் உவமைகள் கூறப்படும்.

மேற்கூறிய மூன்று தன்மைகளில் ஒவ்வொன்றை மாத்திரமே கூறும் ஒவ்வொரு சாரார் உளர். அவர்களுள், இறைவனும் உயிர்களும் ஒன்றே' என்பவர், 'பொன்னும் பணியும்போல' என்று உவமை கூறுவர்; இவர்கள் கேவலாத்துவிதிகள். 'இறைவனும் உயிரும் வேறே' என்பவர், 'ஒளியும் இருளும் போல' என்று உவமை கூறுவர்; இவர் துவிதிகள். 'இறைவனும் உயிரும் ஒன்றும் வேறும்' என்பவர், 'சொல்லும் பொருளும்

போல' என்று உவமை கூறுவர்; இவர் விசிட்டாத்துவிதிகள். இம்மூன்றும் பொருந்தாமைகாட்டி, மேற்கூறியவாறு சித்தாந்தம் கூறும். இது சுத்தாத்து விதமாகும். இச் சுத்தாத்துவித மெய்யைக் கண்டு இனிது விளக்கினமைபற்றியே மெய்கண்டாருக்கு, அப் பெயர் உளதாயிற்று. ஆயினும், இறைவன் இவ்வாறு உயிர்களோடும் உலகத்தோடும் ஒன்ருய் வேருய் உடனுய் நிற்பன் என்பதைத் திருஞானசம்பந்தரே தமது திருவீழிமிழலைத் தேவாரத்துள்.

" ஈருய்முதல் ஒன்ருய்இரு பெண்ணுண்குணம் மூன்ருய்
மாருமறை நான்காய்வரு பூதம்மவை ஐந்தாய்
ஆருர்சுவை ஏழோசையெ டெட்டுத்திசை தானுய்
வேருய் உடனுனன் இடம் வீழிம்மிழலையே "

என அருளிச் செய்திருத்தல் அறிதற்குரித்து. இதனுல், வேதம் இறைவனை, 'அத்துவிதமாய் உள்ளான்' என்றதன் உண்மைப் பொருள் சித்தாந்தத்திலேதான் விளங்குகின்றது. ஆகவே, இறைவன் உயிர்களை எவ்வாறு நின்று செலுத்துவன்? என்னும் வினுவிற்கு, 'கலப்பினுல் ஒன்ருயும், பொருட்டன்மையால் வேருயும், உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனுயும் நின்று செலுத்துவன்' என்பதே விடையாதல் அறிக.

இனி 'இறைவனும் உயிர்களும் பொன்னும் பணியும்போல ஒன்றே' எனின், அவன் செய்யும் செயல் பிறர்பொருட்டாகாது, தன்பொருட்டேயாதலும், 'ஒளியும் இருளும்போல வேறே' எனின். தொடர்பில்லாமற் போதலும் அறிந்துகொள்க, சொல்லும் பொருளும் வேறு வேறே ஆதலின், பேதாபேதம் என்பது ஒரு சம்பந்தம் எங்கும் இல்லை என்று உணர்க.

இனித் திருமுறைகளிலும் சுத்தாத்துவிதத் தன்மையே பேசப்படுவது என்பதை மேற்காட்டிய தேவாரத்தாலும், 'ஒன்று நீயல்லை அன்றி ஒன்று இல்லை யாருன்னை அறியகிற்பாரே' (திருவாசகம்) என்பது முதலிய பகுதிகளாலும் நன்குணர்ந்து கொள்க.

மாணுக்கன்: அடிகள் இங்ஙனம் அருளியவாற்ருல், 'இறைவனுக்கும் உயிர் உலகங்கட்கும் உள்ள சம்பந்தம் அத்துவித சம்பந்தம்' என்பதும், அத்துவிதமாவது இது என்பதும் நன்குணர்ந்து கொண்டேன்.

(தொடரும்)

திருக்குவளையில்

# பன்னிரு திருமுறை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம் மகா கும்பாபிஷேக விழாவையொட்டி 26—6—64 வெள்ளிக்கிழமை முதல் 29—6—64 திங்கட்கிழமை முடிய நான்கு தினங்கள் காலை மாலை இருவேளைகளிலும் பன்னிரு திருமுறை மாநாடு மிகச் சிறப்பாக நிகழ்ந்தேறியது.

திருக்கோயிலில் அமைக்கப்பெற்றிருந்த மாபெரும் மாநாட் டுப்பந்தல் மேற்கட்டிகளாலும் வண்ணத் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்று விண்தவழும் மின்விளக்குகளால் ஒளிமய மாகத் திகழ்ந்தது. பன்னிரு திருமுறைகளும், சப்தவிடங்கத் தலங்களும் பற்றிய சிந்தனைகள் மாநாட்டுப் பொருளாக அமைந் தது. ஒவ்வொரு நாளும் இரவில் மாநாட்டு முடிவில் இசை யரங்குகளும், இன்னிசைச் சொற்பொழிவுகளும், பக்திப் பஜனை களும் மிகச் சிறப்பாக நிகழலாயின. பெருந்திரளான மெய் யன்பர்கள் குழுமியிருந்து மாநாட்டைச் சிறப்பித்ததோடு, பொன்னும், மெய்ப்பொருளும், போகமும், திருவும்பெற்று இறை வனது பெருங்கருணைத் திறத்தில் திளைக்கலாயினர்.

26—6—64 வெள்ளிக்கிழமை மாலை தொடங்கப்பெற்ற திருமுறை மாநாட்டைத் தொடங்கிவைத்த திருவாரூர் பெரு நிலக்கிழார் திரு. ஜி. இராமானுஜ முதலியார் அவர்கள் திருமுறை மாநாட்டின் அவசியத்தை வலியுறுத்தியதோடு தருமையாதீ னத்தின் சமய நற்பணிகளைப் பாராட்டிப் பேசினார்கள்.

தொடர்ந்து, சென்னை சமயப்பிரசார நிலையம் வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் முதல் திருமுறைபற்றி விரிவுரையாற்றுகையில் ஞானசம்பந்தப் பெரு மானின் வரலாற்றினைச் சுருங்கக்கூறி, முதற்றிருமுறையில் சில பாடல்களை எடுத்துக்காட்டிச் சிறப்புரை ஆற்றினார்கள்.

அடுத்துப் பேசிய பேரூர், சாந்தலிங்க அடிகளார் கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. இராமசாமி அடிகள் அவர்கள் இரண்டாம் திருமுறை பற்றி உரை நிகழ்த்துகையில் சைவ சமயக் கருத்துக்கள் எவ்வாறு பிள்ளையாரின் திருப்பாடல்களுள்

பொதிந்து கிடக்கின்றன என்பதை அகச்சான்றுகள் காட்டி விரித்துரைத்தார்.

பின்னர் சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்ருகிய திருநாகைக் காரோணத்துக் கோயில் கொண்டுள்ள சுந்தரவிடங்கப் பெருமானைப்பற்றி நாகப்பட்டினம் தேசிய உயர்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர், தருமையாதீனப்புலவர், வித்துவான். திரு. வை. மு. சண்முகதேசிகர் அவர்கள் விரித்துரைக்கையில் சப்த விடங்கத் தலங்களுள் நாகைக்கு உள்ள பெருமையினைத் தக்க வகையில் விரித்துரைத்தார்கள்.

இரவு திருமதி. டி. ஆர். கமலாமூர்த்தி குழுவினரின் 'சுந்தரர்' என்ற பொருள்பற்றிய இன்னிசைச் சொற்பொழிவு நிகழலாயிற்று.

27—6—64 சனிக்கிழமை காலை 8-30 மணிக்குத்தொடங்கிய இரண்டாம்நாள் காலை நிகழ்ச்சியில்:வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவாய்மூரில் கோயில் கொண்டுள்ள நீலவிடங்கப் பெருமானின் பெருங் கருணைத் திறத்தை இனிது விளக்கலானுர்கள்.

அடுத்து, தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பொறுப்பு முதல்வர், 'திருநெறிச்செம்மல்' வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் மூன்ரும் திருமுறைபற்றிப் பேசுகையில் அரியபல மேற்கோள் காட்டிப் பிள்ளையாரின் பாடல்களைப் பேசினுர்கள்.

தொடர்ந்துபேசிய, திருப்பனந்தாள்செந்தமிழ்ப்பேராசிரியர் வித்துவான் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் நாவுக்கரசுப் பெருமான் அருளிய முதற்றிருமுறையாகிய நான்காந் திருமுறை பற்றி அரியபல கருத்துக்களை வெளியிட காலை நிகழ்ச்சி இனிதே நிறைவெய்தலாயிற்று.

இடைவேளைக்குப்பின்னர் மாலை தொடங்கிய மாநாட்டில் முதற்கண் உரையாற்றிய தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், சித்தாந்தக் கலைமணி, வித்துவான். திரு. சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கள் திருக்குவளை எனப் படும் திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கும் அவனிவிடங்கத் தியாகராஜப்பெருமானின் அருட்கருணையினை இனிது விளக்கிப் பேசினுர்கள்.

தொடர்ந்து பேசிய திருவையாறு, கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர் வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்களும், சிதம்பரம் பச்சையப்பன் உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணியப்பிள்ளை அவர்களும் முறையே அப்பரடிகள் அருளிய ஐந்து, ஆறுந் திருமுறைகளைப் பற்றித் தக்க மேற்கோள்கள் காட்டி இனிது உரை நிகழ்த்தினர்கள்.

இரவு பித்துக்கொளி முருகதாஸ் குழுவினரின் பக்திப் பஜனை நிகழலாயிற்று.

26—6—64 ஞாயிற்றுக்கிழமை காலை தொடங்கிய மாநாட்டில் திருவாரூர். இராஜாங்கக்கட்டளை, கட்டளை விசாரணை' வித்துவான் ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருக்காருயில் ஆதிவிடங்கப் பெருமானைப்பற்றிப் பேருரையாற்றினர்கள்.

பின்னர், திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான். திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள் சுந்தரமூர்த்தி நாயனர் அருளிய ஏழாந் திருமுறை பற்றி விளக்கிப் பேசினர்கள்.

தொடர்ந்து பேசிய அண்ணமலைப் பல்கலைக்கழகம் மொழி ஆராய்ச்சித் துறை ஆய்வர், 'செஞ்சொற்கொண்டல்' வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., அவர்கள் மணிவாசகப் பெருமான் அருளிச்செய்த எட்டாந் திருமுறைப்பற்றிய சிந்தனையை விரிவுரையாக நிகழ்த்தினர்கள்.

இறுதியிற் பேசிய தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித்தமிழ்ப் பேராசிரியர் சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன் அவர்கள் ஒன்பதாம் திருமுறை பற்றி உரையாற்றிய பின்னர் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

அன்றுமாலை மாநாட்டைத் தொடங்கிவைத்துப் பேசிய நெடும்பலம், பெருநிலக்கிழார், திரு. என். எஸ். இராமலிங்கம் எம். எல். ஏ., அவர்கள் கும்பாபிஷேகத்தின் அவசியம் பற்றியும், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் இறைபணிகள் பற்றியும் பலபடப் பாராட்டிப் பேசினர்கள்.

சிறப்புரை நிகழ்த்திய மதுரையாதீனம் 291வது குருமகாசந்நிதானம், திருவருள் தவயோக, ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சப்தவிடங்கத் தலங்களின் பெருமைகளை விளக்கியதோடு, திருமுறைகள், கும்பாபிஷேகம் ஆகியவற்றின் பெருமைகளையும் இனிது விளக்கிப் பேருரையாற்றினர்கள்.

அடுத்துச் சொற்பொழிவாற்றிய சென்னை 'கலைமகள்' ஆசிரியர் செந்தமிழ்ச்செல்வர் வித்துவான். திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ., அவர்கள் பத்தாந் திருமுறைபற்றியும், சென்னை பைந்தமிழ்ச்செல்வர் திரு. ச. சிவகுமாரன் எம். ஏ. அவர்கள் பதினென்றும் திருமுறைபற்றியும் சொற்பொழிவாற்றினர்கள்.

பின்னர் அண்ணுமலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரி முதல்வர், தருமையாதீன இசைப்புலவர் இசையரசு திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி இனிதே நிகழலாயிற்று.

இரவு பெங்களூர் திருமதி சுதாராணி குழுவினரின் 'நவசக்தி நிருத்தம்' என்பதுபற்றிய நாட்டியம் நிகழ்ந்தது.

காலை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் போராசிரியை வித்துவான் திருமதி. ப. நீலா. அவர்கள் "சுந்தரர் செந்தமிழ்" என்ற தலைப்பில் சிறந்ததொரு விரிவுரையாற்றினர்கள்.

29—4—64 திங்கட்கிழமை மாலை திருவாரூர் உயர்பள்ளி தலைமைத் தமிழாசிரியர் வித்துவான். திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள் திருஆரூர் வீதிவிடங்கப் பெருமானைப்பற்றிப் பேருரையாற்றினர்கள்.

இரவு சென்னை திருமதி வி. சாந்தா குழுவினரின் பஜனை நிகழலாயிற்று. இரவு 10 மணியளவில் விழா இனிது நிறைவெய்தலாயிற்று.

---

## EXRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswami Devasthanam, Tirucadaiyur.

Today I am fortunate to have the Dharsan of Sri Amirthagateswarar and Abirami Devi. The puja and the management are superb, and I look for visiting the temple often.

(Sd.) T. Subramanian,
Advocate, High Court Madras.

27—5—64.

## திருவாரூர்ப் பொதுமக்கள்

### ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் சமய வளர்ச்சிப் பணிகளைப் பாராட்டி வழங்கிய

# பாராட்டு வாழ்த்துரை

கயிலைகண்ட காருண்ய மூர்த்தியே!

பிறவி எடுத்ததின் பயன் இறைவழி நின்று அவன் அருளைப் பெற்று வீடு பேறு அடைதலேயாகும். இறைவன் ஆன்ம கோடிகள் உய்யும்வண்ணம் இப்புண்ணிய பூமியாகிய பாரத தேசத்தில் வட இமயம் முதல் தென்குமரி வரை பல புண்ணியத் தலங்களில் கோயில்கொண்டு அருள்பாலித்து வருகின்றான். இவற்றுள் இமயத்தின் ஏற்றமிக்க இடத்திலிருப்பது கயிலை மலையாகும். அன்று காரைக்காலம்மையாரும் நாவுக்கரசுப் பெருந்தகையும் கண்டுகளித்த கயிலை மலையைத் தாங்களும் கண்டு களித்தீர்களென்றால் எம்மனோர்கள் தங்களையும் அவ்வருட் செல்வர்களின் வரிசையில் வைத்துப் போற்றுதற்கு என்ன தடையுளது. தாங்கள் கயிலை சென்ற காலத்தில் தங்கள் திருமேனிக்கு ஏற்பட்ட இன்னல்களைப் பொருட்படுத்தாது "ஆளும் நாயகன் கயிலையின் இருக்கை கண்டலல்லால் — மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்ற அப்பர் அடிகளின் அயரா உறுதியைத் தங்கள் திருவுளத்தடக்கி திருத்தருமை; கயிலாயபரம்பரையில் வரும் ஞானபீடம் என்ற உண்மையை உலகறியச் செய்தீர்கள். தங்களது ஞான அரசு என்றும் பொலிவுறுக.

ஆலயம் புரக்கும் அருந்தவச் செம்மால்!

ஆலயம் ஆண்டவன் உறைவிடம். "ஊரான் ஓர் தேவ குலம்" என்பது சங்ககாலச் சான்றோர் வாக்கு. தென் தமிழகத்தே ஆலயமில்லாத ஊரைக் காண்டலே அரிது. தங்களது ஆதீனத்தின் அரியகண்காணிப்பில்இன்று இருபத்தேழு தேவத்தானங்கள் இருந்துவருகின்றன. துறவு நெறியிலிருந்து ஆலயப்பணிகளைப் பேணி வளர்ப்பதே சால்புடைய நெறியென உணர்ந்த பண்டைத் தமிழ் மன்னர்கள் மேற்கண்ட தேவத் தானங்களைத் தங்கள் ஆதீனத்தின் பார்வையில் அமைத்தது அரியசெயலேயாகும். இன்று தங்களது அருளாட்சியில் இவ் வாலயங்கள் ஏற்றமுறுகின்றன. சிவாகம நெறியில் நித்திய

நைமித்திகங்கள் நடைபெறுகின்றன. அன்றியும் ஆலயத்தி லுள்ள மூர்த்திகளுக்குத் தெய்வ சாந்நித்தியத்தைத் தருவது பெருஞ்சாந்தி எனப்படுகின்ற கும்பாபிடேக மென்பதை உணர்ந்து தாங்கள் பெரும்பாலான தேவத்தானங்களில் கும்பா பிடேகத்தை நடத்தி வருகின்றீர்கள். தன்னலமற்ற தங்கள் சிவப்பணி அயலார் ஆலயங்களும் சீர்பெற வேண்டி பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை வாரி வழங்குகிறதென்றால் தங்கள் அருளாட்சியின் மாண்பு ஏட்டிலெழுத அடங்குமோ.

சிவநெறி பரப்பும் தெய்வ மணியே!

திருவாரூர் சரித காலத்திற்கு முன்னிருந்தே பழம் பெருமை பெற்று வரும் பழம்பதியாகும். இவ்வூரில் கோயில் கொண் டிருக்கும் ஸ்ரீ கமலவஸந்தத் தியாகராசப் பெருமானின் தேவத் தானத்திற்கு உயிர் நாடியாய் இருந்து வருவது இராசன் கட்டளை. தங்களது அரிய நிர்வாகத்தில் எங்களது ஆரூர்ப் பெருமானது ஆலயமும் பல வழிகளிலும் சிறப்புற்று முன்னேற வேண்டு மென்று வேண்டுகிறோம். "செய்போல் இருப்பர் கண்டீர் உண்மை ஞானம் தெளிந்தவரே" என்ற பட்டினத்தடி களின் திருவாக்கிற் கிணங்க குழைந்தையுள்ளம் படைத்து துறவரசாய்த் திகழும் தாங்கள் பார்வையால் கண்டாரை வசப் படுத்திப் பரிவுரையால் அன்பைப் பெருக்கி பக்தி நெறியை வளர்த்து வருகின்றீர்கள். தங்களது அருளாட்சி நீடு வாழ்க! வாழ்க!! என வாழ்த்தி அமைகின்றோம்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Amirthagateswaraswami Devasthanam, Tirucadaiyur.

I had the great privilege of having the Darsan of the Lord Amirthagateswarar and Goddess Abirami Ambal on this blessed day. The temple, and its premises are very well maintained as it is in the other Devasthanams under the Adhinam's management.

Pray the Lord and Ambal shower this blessings on all beings.

(Sd.) Salem S. Jayalakshmi,
24—5—64.

M. S. H. THOMPSON,
14. Norman Avenue,
Twickenham,
Middlesex,
England.

4 July, 1964.

Dear Sir

Please accept my very best thanks for the sumptuous edition of the Sixth Canon of TEVARAM received more than a month ago in perfect condition between boards cut to size and bound in velvet. I was really stunned by the gift, and hoped that by waiting a little and examining the book in some detail and learning more of its merits I should be better able to return adequate thanks for it. Hence the delay.

The book has been edited on the most modern lines with critical introductory remarks and glossary, and is a notable contribution to Tamil learning, on which more especially the learned writer of the expository notes deserves to be heartily congratulated. The able arrangement of the letterpress and the happy provision of illustrations make it a joy to handle the volume, and the press may well be proud of its achievement in high class book production. The book has never left my table since its arrival, and there it will remain until I have completed my study of it.

Only the munificence of His Holiness has made all this possible, and I request that you will be so kind as convey to him my most grateful and respectful thanks for the light on the path of Holiness leading upwards among the crags of time to the accompaniment of song that TEVARAM is to me.

குருபூஜை விழாவில்



திருக்கயிலாய நினைவுச்சின்னங்களுக்கருகில்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களது
பட்டணப்பிரவேசக் காட்சி

திருக்கோளிலிப் பொதுமக்கள் வணக்கத்துடன் கூறிய

# பாராட்டு வாழ்த்துரை

சிவநெறி பரப்பும் தவமிகும் அண்ணல்!

மக்கள் மக்களாக வாழவேண்டின் அவர்களைத் தெய்வ நெறிப்படுத்த வேண்டும். தெய்வ நெறி துறவு நெறியில் நிற்கும் மஹான்களால்தான் வளரும். இறைவன் பெருமைகளைப் பொது மக்களுக்கு உபதேசம் செய்வதற்கென்றே குருபீடங்கள் தோன்றி யுள்ளன. ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் சந்ததி தழைக்க தருமைவரும் கயிலைக் குருமணியாகிய தாங்கள் தங்களது அருளாட்சியில் மக்களுக்கு எண்ணிறந்த வழிகளில் தெய்வநெறியைப் புகட்டி வருகிறீர்கள். தங்கள் அருளாட்சி நீடுவாழ்க!

ஆலயப்பணியே அரன்பணி என்பதை அறிவிக்கும்
அருந்தவச் செம்மால் !!

இன்று தென் தமிழகத்தே தங்கள் ஆதீனத்திற்குச் சொந்த மாக இருபத்தேழு தேவஸ்தானங்கள் உள்ளன. இவ்வாலயங்கள் எல்லாம் சீரும் சிறப்பும் பெற்று மக்களுக்குத் தெய்வ ஒளியைப் பரப்பிவருவதற்குத் தாங்கள் அரும்சாதனைகள் செய்துள்ளீர்கள். எண்ணிறந்த ஆலயங்களுக்குக் கும்பாபிஷேகம் செய்விக் கின்றீர்கள். இன்று எங்களூரில் ஸ்ரீ தியாகராஜப்பெருமான் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான இந்த ஆலயத்திற்குச்சிறந்த முறையில் திருப்பணிகள்செய்து கும்பாபிஷேகம் நடத்தி எங்களைப் பக்திநெறியில் வாழச்செய்கின்றீர்கள். தங்களுக்கு நாங்கள் செய்யும் கைம்மாறு யாது?

சாந்தமும் அன்பும் தவழும் தவவேந்தே!!!

கயிலைக் குருமணியாகத் திகழும் தாங்கள் தங்களை அடைந் தவர்கள் அனைவருக்கும் அன்புமொழிகூறி, ஆசி புரிவதுடன் அனைவரையும் சிவநெறியில் நிற்கும்வண்ணம் செய்கின்றீர்கள். தங்களது அருளாட்சி தென்னாட்டிற்கே ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. தங்களது சிவப்பணி என்றும் வாழ்க வாழ்க என்று ஸ்ரீ தியாகேசப் பெருமான் திருவடிகளை வணங்கி வாழ்த்துகின்றோம்.

வாழ்க கயிலைக்குருமணி! வளர்க தருமையாதீனம்!

வேதாரணியம் ஆதீன வித்துவான்

ஆ. முத்துச்சட்டநாத தேசிகர்

# வாசித்தளித்த தோத்திரப்பாடல்

பொன்னிவளந்தரு நாட்டிற் புகழோங்கு தருமைநகர்
என்னும் வளம்பதியதனில் குருஞான சம்பந்தர்
மன்னிய சீர்த்திருமரபில் வந்தருளு மாமணியே
என்னுடைய நாயகனே. எழிலாருந்தவமணியே.

ஆதீனத்திருபானேழ் ஆலயமும் பணியாற்றி
மாதவரும் புகழ்ந்தேத்த மாசாந்தியியற்றியே
நாதற்காங்கும்பா அபிஷேகம் நலஞ்சிறக்க
காதலாற் செய்தருளுங் கண்ணுதலாரருள்மணியே.

கண்ணுதலாரமர்ந்தருளும் பூலோக கயிலாயம்
நண்ணரிதாந் தலஞ்சென்று நாதனருள்பெற்று
மண்ணுலகோர் மகிழ்ந்தேத்த மாகனகவபிஷேகம்
புண்ணியர்கள் புரிந்தேத்தும் புகழ்மிக்க புண்ணியமே.

சீராருஞ்சுந்தரர்க்குச் சீருடனே நெல்லளித்த
பாரார் கோளிலிக் கோயிற் பணிபலவுஞ் செய்தமைத்து
ஏராரும் யாகமாசாலைதனை இயற்றுவித்து
ஆராதகாதலினல் அறுகாலம்பூசித்து.

நலந்தருகுரோதியாண்டில் நன்மதி மிதுனந்தன்னில்
பலந்தரு பதினறு நாள் பன்னிய சோமவாரம்
வலந்தரு மவிட்ட நாளும் வாய்ந்திடு சித்தயோகம்
தலந்தரு சிம்மவோரை சார்ந்திடு நன்னடன்னில்

வண்டமர் பூங்குழலியம்மை வளமருள் கோளிலியாம்நாதர்
தண்ணருட் தியாகவிசர்தரும் பரிவாரரானோர்
எண்ணிய சீர்க்கடவுளர்க்கும் எழிலுடன் கும்பாபிஷேகம்
புண்ணியர் போற்றியேத்தப் புரிந்தருள் புகழார்தேவே

அண்ணலே நின்றன் நன்மையளவறிந்திசைக்க வல்லேன்
எண்ணியவன்பினல் யான் ஏத்தியே வணங்கப்பெற்றேன்
வண்ணவார் சடையார் நாதன் வளந்தருமருளினலே
மண்ணவர் புகழ்த்து போற்ற நாள் பலவாழ்கமாதோ.

சுபம்.

# சப்தவிடங்கத் தல தரிசனம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் பல பெருந் திருப்பணிகள் நடைபெற்றன. 29—6—64 அன்று மகாகும்பாபிஷேகமும் மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது. திருக்குவளை சப்தவிடங்கஸ்தலங்களுள் ஒன்று. முசுகுந்தன் இந்திரனிடமிருந்து பெற்ற தியாகராஜ மூர்த்திகளை எழுந்தருளச்செய்த தலங்களே சப்தவிடங்கத் தலங்கள் எனப்படும். சப்தவிடங்கத் தலங்களில் ஒன்றுகிய திருக்குவளைத் திருக்கோயிற் கும்பாபிஷேகத்திற்கு முன்னர் சப்தவிடங்கத் தலங்களையும் ஒரேநாளில் தரிசனம் செய்தருளினர்கள். 22-6-64 திங்கட்கிழமை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் வழிபாட்டை முடித்துக்கொண்டு சப்தவிடங்கத் தல தரிசனத்திற்கு அன்பர்களுடன் எழுந்தருளினர்கள். முதன் முதலாகத் திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளி அருச்சனைகள் செய்வித்து வழிபாடாற்றினர்கள். அங்கு எழுந்தருளியுள்ள தியாகராசப் பெருமான் நகவிடங்கர். அவரது நடனம் உன்மத்த நடனம்.

அடுத்து நாகப்பட்டினத்தில் திருநாகைக்காரோணேஸ்வரர் திருக்கோயிலில் வழிபாடு செய்து அங்குள்ள மூர்த்திகளுக்குப் பரிவட்டம், புடவை, முதலியன சாத்தி மகிழ்ந்தார்கள். தியாகராஜப்பெருமான் சுந்தரவிடங்கர். அவரது நடனம் பாராவார தரங்க நடனம். அடுத்து திருமறைக்காட்டிற்கெழுந்தருளி அங்கு எழுந்தருளியுள்ள சுவாமி அம்பாள் முதலிய மூர்த்திகளுக்குப் பரிவட்டம் பட்டு முதலியன சாத்தி வழிபட்டு மகிழ்ந்தார்கள். பின்னர் அங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீதுர்க்காம்பிகைக்குப் பட்டுப்புடவை சாத்தி வழிபட்டார்கள். அங்கு எழுந்தருளியுள்ள தியாகராஜப்பெருமான் புவனிவிடங்கர் நடனம் ஹம்ஸபாத நடனம். இத்தலங்களில் தியாகராஜாவுக்கு சகஸ்ர நாமார்ச்சனை செய்யப்பட்டது.

அங்கிருந்து திருவாய்மூருக்கு எழுந்தருளி திருவாய்மூர் நாதரைத் தரிசித்தார்கள். பட்டு, பரிவட்டம் புடவை முதலியன

சாத்தப்பட்டன. ஸ்ரீ தியாகராஜருக்கு சகஸ்ரநாமார்ச்சனை செய்து வழிபட்டுத் திருக்குவளைக்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீ தியாகராஜப்பெருமான் நீலவிடங்கர். அவரது நடனம் கமல நடனம் திருக்குவளையில் ஸ்ரீ தியாகராஜப்பெருமானுக்கு முசுகுந்த ரால் செய்யப்பட்ட சகஸ்ரநாமார்ச்சனை சிறந்த முறையில் செய்யப்பட்டது. தியாகராஜாவுக்குப் பட்டு சாத்தி, சுவாமி அம்பாள் முதலிய மூர்த்திகளுக்குப் பரிவட்டம் முதலியன சாத்தி வழிபட்டார்கள். இங்கு எழுந்தருளியுள்ள தியாகராஜப் பெருமான் அவனிவிடங்கத் தியாகராஜர். அவரது நடனம் பிரமரநடனம். திருக்குவளையிலிருந்து எட்டிகுடிக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். திருக்காறாயிலில் சுவாமி அம்பாள் ஸ்ரீதியாகராஜர் முதலிய மூர்த்திகளுக்குப்பட்டு பரிவட்டம் புடவை முதலியன சாத்தி ஸ்ரீ தியாகராஜவுக்கு சகஸ்ரநாமார்ச்சனை புரிந்து வழிபட்டார்கள். இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமான் ஆதிவிடங்கர். நடனம் குக்குட நடனம்.

அடுத்து திருவாரூருக்கு எழுந்தருளினார்கள். திருவாரூர்த் தியாகராஜப்பெருமான் வீதிவிடங்கர். அவரது நடனம் அசபா நடனம். இங்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் எழுந் தருளி ஸ்ரீ தியாகராஜாவுக்கு சாதரா சாத்தி முசுகுந்தார்ச்சனை தொடங்கிவைத்தார்கள். பின்னர் சுவாமி அம்பாள் முதலிய மூர்த்திகளுக்குப் பரிவட்டமும் பட்டுப்புடவைகளும் சாத்தி வழி பாடாற்றினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் கட்டளை மடத் திற்கு எழுந்தருளியானதும் கொலுவீற்றிருந்து அருள்வழங்கி னார்கள். கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கொலு ஆராதனை செய்தார்கள். அன்பர்கள் பலர் வழிபாடு முதலியவற்றில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாரூரிலிருந்து தருமைக்கு எழுந்தருளினார்கள்.

# செய்திகள்

## திருக்குவளையில் மகாகும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச்சொந்த மான தேவஸ்தானங்களில் திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானமும் ஒன்ருக விளங்கி வருகிறது. இத்திருக்கோயிலில் திருப்பணிகளை நிறைவேற்றி மகாகும்பாபிஷேகம் நிகழ்த்த வேண்டுமென்று திருவுளம் பற்றினுர்கள்; அவ்வண்ணமே சுவாமி விமானம், அம்பாள் விமானம் முதலிய எல்லா விமானங் களும், இராஜகோபுரம் இரண்டாங் கோபுரம் முதலியனவும் புதுப்பித்துப்பழுது பார்த்து வர்ணம் வைத்தும் சுவாமி சந்நிதி உட்பிராகாரங்கள் கருங்கல் தளவரிசை செய்தும், வெளிப்பிரா காரங்கள் செங்கல் தளவரிசை செய்தும், கோயில் மேல் தளம் முழுவதும் புதுப்பித்தும், கோயில் உட் சுவர்கள் திருத்தியும் கொடிமரம் புதிதாக அமைத்தும், சந்நிதியில் ஐதிகச்சுதைகள் அமைத்து, சித்திர வேலைகள் செய்தும் திருப்பணிகள் செய்யப் பட்டுள்ளன. மேலும் இத்தலத்தேவாரத்திருப்பதிகங்களை அன்பர்கள் ஓதிப்பயனடையுமாறு சலவைக்கல்லில் பொறித்துப் பதித்துவைத்தும், ஸ்ரீ தியாகராஜாவுக்கு வெள்ளி மஞ்சம், வெள்ளி சிம்மாசனம் முதலியன செய்வித்தும் திருக்குளத்தைப் புதுக்கி, பக்கச்சுவர் எடுத்து கருங்கல் படித்துறைகட்டியும் திருப்பணிகள் செய்விக்கப் பெற்றன.

கும்பாபிஷேகத்திற்கு ஆன வேலைகள் எல்லாம் துரிதமாக நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் அடிக்கடி எழுந்தருளி மேற்பார்வையிட்டுத் திருப்பணிகள் செம்மையுற நிகழ ஊக்குவித்தருளினுர்கள். ஆதீனத்தின் உள்ள சூப்பரிண்டெண்டெண்ட் முதலியவர்களும் அடிக்கடி சென்று பார்வையிட்டுத் திருப்பணிகள் செம்மையுற நிகழ ஆவன புரிந் தார்கள்.

திருக்கோயிலில் உள்ளே நுழைந்ததும் வெளிப்பிராகாரத் தில் தென்கிழக்காக மேற்கு முகமாக பிரதான யாகசாலை அமைக்கப்பட்டிருந்தது. யாகசாலை மண்டபவடிலில் கட்டப்பட்ட

ஒரு புதிய கட்டிடத்தின் தோற்றத்துடன் விளங்கியது. யாக சாலையின் உள்ளே ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ பிரமபுரீசுவரர், ஸ்ரீ வண்டமரும் பூங்குழலாள் முதலிய மூர்த்திகளின் கலசங்கள் வைத்துப் பூஜைகள் செய்யப்பட்டன அவற்றிற்குரிய விமானங்கள் அழகிய முறையில் சிறந்த வேலைப்பாட்டுடன் வெட்டி வேரினுல் அமைக்கப்பட்டிருந்தன. யாகசாலைக்கு என்று பொருத்தப்பட்ட மின்விளக்குகள் அழகுக் கழகு செய்வதாக அமைந்து, பேரொளி யுடன் விளங்கிற்று.

யாகசாலைக்கு எதிரில் தென்மேற்கில் கிழக்கு முகமாகப் பன்னிருதிருமுறை மாநாட்டுப்பந்தல் அமைந்திருந்தது - மா நாட்டுச் சிறப்பு நிகழ்ச்சிகளாகிய கதாகாலக்ஷேபம், நாட்டியம், இன்னிசை முதலியன அங்கு அமைக்கப்பெற்ற மேடையில் நிகழ்ந்தன.

கட்டளை மடத்துக்குக் கெதிரிலும் கோயிலுக்கு எதிரிலும், வெளிப்பிராகாரத்திலும் அழகிய முறையில் விழாப்பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. மேலும் திருமுறை வாணர்கள், முதலிய பலதுறைப்பட்டவர்கள் தங்குவதற்கென்று கொட்டகைகள் தனித் தனியே அமைக்கப்பட்டிருந்தன. அதைப்போன்றே உணவிற் காகவும் தனித்தனியாகப் பெரிய அளவில் நூற்றுக்கணக் கானவர் ஒருசேர உண்ணும் வாய்ப்பாக கொட்டகை அமைக்கப் பட்டிருந்தது. பந்தல்கள் முழுவதும் மேல் கட்டிகளாலும் தோரணங்களாலும் வண்ண மின்விளக்குகளாலும் ஒப்பனை செய்யப்பட்டிருந்தது.

யாகசாலை பூஜைக்கு வேண்டிய முன்னேற்பாடுகள் 24-6-64 அன்றே தொடங்கப்பட்டன. அன்று விக்னேஸ்வர பூஜை வாஸ்து சாந்தி முதலியன நடைபெற்றன. 25—6—64 அன்று நவக்கிரக ஹோமம் மிருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம் முதலியன நடைபெற்றன. 26—6—64 வெள்ளிக்கிழமையன்று கலாகர்ஷணம், யாககால ப்ரவேசம் நிகழ்ந்தன. இரவு யாகபூஜை தொடங்கி நடைபெற்றது. 27, 28—6—64 ஆகிய இவ்விருநாட் களிலும் காலை மாலை இருவேளைகளிலும் யாகபூஜைகள் நடை பெற்றன. 29—6—64 திங்கட்கிழமையன்று விடியற்கால முதலே பூஜைகள் தொடங்கப்பட்டன. சுமார் 7-மணிக்கு பரிவார பூர்ணுகுதி நடைபெற்றது. தேரடியிலுள்ள விநாயகர் கோயிலுக்குரிய கடம் எழுந்தருளியது. 7-15 மணி அளவில் விக்கினங்களைப் போக்கியருளும் பெருமான் திருக் கோயிற் கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. பின்னர் 9 மணிக்குமேல்

யாகசாலையில் பூர்ணாகுதி நடைபெற்றது. யாககலசங்கள் எழுந்தருளச்செய்து வலமாக எடுத்துவரப்பட்டன, உரிய இடத்திற்கு கலசங்கள் வந்துசேர்ந்ததும், முறைப்படி மகாகும்பாபிஷேகம் அரகரமுழக்கத்துடனும், தேவார இன்னிசை, நாதஸ்வர இன்னிசை அதிர்வேட்டுகள் முதலியவற்றுடனும் மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. பின்னர் முறையே மூலஸ்தான மூர்த்திகளின் அபிஷேகமும் மகாபிஷேகமும் நடைபெற்றன. ஸ்ரீ தியாகராஜாவுக்கு முசுகுந்த சகஸ்ரநாமார்ச்சனை மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தஞ்சை அறநிலைய துணை ஆணையர்திரு K. சோமசுந்தரத் தேசிகர் அவர்கள் வந்து தரிசனம் செய்து மகிழ்ந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடை போர்த்துச் சிறப்பித்தார்கள்.

யாகசாலைக்கு எதிரில் அகண்ட பாராயணமாகத் திருமுறைப் பாராயணமும், வேத சிவாகம பாராயணமும் நடைபெற்றன. தமிழ்நாட்டில் உள்ள சிறந்த திருமுறைவாணர்கள் எல்லோரும் வந்து பாராயணத்தில் கலந்து கொண்டனர். யாகசாலைப் பூசையின் போதும் திருமுறை வாணர்கள் பன்னிரு திருமுறைகளிலிருந்தும் பல பாடல்களை உருக்கமாகப் பாடி எல்லோரையும் உருகச்செய்தனர். 28-6-64 அன்று இரவு யாகபூஜையின் போது அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரி முதல்வர் திரு M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள் திருமுறைப்பாடல்களைப்பாடி மகிழ்வித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் நாள்தோறும் யாகசாலையில் நிகழ்ந்த பூஜைகளுக்கு எழுந்தருளி வழிபட்டார்கள். மூர்த்திகளுக்கு அஷ்டபந்தன மருந்துகள் சாத்துவதையும் அடிக்கடி பார்வையிட்டு செம்மையாகச் செய்வித்தார்கள்- கும்பாபிஷேகத்தன்று காலையில் எழுந்தருளி பூர்ணாகுதி தீபாராதனையைக் கண்டுகளித்து மகாகும்பாபிஷேக தரிசனம் செய்து மகிழ்ந்தார்கள். கும்பாபிஷேக தரிசனத்திற்கு மதுரை ஆதீனம் மகாசந்நிதானம் அவர்களும் எழுந்தருளினார்கள். அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடை போர்த்துச் சிறப்பித்தார்கள். கும்பாபிஷேகத்திற்குப் பின்னர் கோயில் மரியாதைகளுடன் மகாசந்நிதானம் அவர்கள் கட்டளைமடத்திற்கு எழுந்தருளினார்கள். அங்கு அன்பர்கள் பலர் வழிபட்டுப் பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்துக்குப்

பாராட்டுரைகள் வாசித்தளிக்கப்பெற்றன. (அவை தனியே வெளியிடப்பட்டுள்ளன) கும்பாபிஷேக தரிசனத்திற்கு வந்த அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வைக்கப்பெற்ற துணிப்பைகளை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழங்கினார்கள்.

29—6—64 திங்கட்கிழமை மாலை திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், வித்வான் இளவரசு ஸ்ரீமத் முத்துக்குமரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் திருக்குவளைத் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள். கோயில் மரியாதைகள் முதலியவற்றுடன் வரவேற்று தரிசனம் செய்துவைக்கப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடை போத்திச் சிறப்பித்தார்கள்,

இரவு இரண்டு புஷ்பப்பல்லக்குகளிலும் மஞ்சங்களிலும் பஞ்ச மூர்த்திகள் புறப்பாடாயிற்று. மின்விளக்குகளால் ஒப்பனை செய்யப்பெற்ற வெள்ளிரதத்தில் ஸ்ரீ தியாகராஜர் புறப்பாடும் நிகழ்ந்தது. வீதியுலாவில் பலதிரப்பட்ட மக்களும் கண்டுகளிக்கும்வகையில் பொய்க்கால் குதிரை, மயில்டான்ஸ் முதலிய கேளிக்கைகளும் நிகழ்ந்தன. சிறந்த நாதஸ்வர இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மக்கள திரளாக வந்து கண்டு களித்தனர்.

## சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

## தமிழ் வருஷப்பிறப்பு விழா

13—4—64 மாலை குரோதி வருஷப் பிறப்பு விழாவும், திருவெண்ணெய்நல்லூர்ப் புராண வெளியீட்டு விழாவும் சென்னை மாநில செய்தித்துறை அமைச்சர் கனம் ஜி. பூவராகவன் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

சென்னை "ஜோதிஷமணி" ஆசிரியர் பஞ்சாங்க விளக்கம் செய்து வருஷ பலன்களை விவரித்தார். திருக்கோவலூர் திரு. வடிவேல் முதலியார் இயற்றிய திருவெண்ணெய்நல்லூர்ப் புராணத்தை ஷை ஆசிரியர் வேண்டுகோட்படி தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் ஆதீனப் பதிப்பாக வெளியிட்டு ஆசிரியருக்கு அருட்கொடையாக வழங்கியுள்ள

திருவெண்ணெய்நல்லூர்ப் புராணத்தை சென்னை மாநில அற நிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் வெளியிட்டார்கள்.

ஆணையர் தலபுராணங்களில் பல உண்மைகள் பொதிந்து கிடக்கின்றதென்றும், இப்புராணத்துள் பல தர்மங்கள் கூறப் படுகின்றன என்றும், அன்றுடம் மனிதன் எப்படி வாழவேண்டும் என்பனபோன்ற ஒழுக்கங்களை அறிவிக்கின்றன என்றும் குறிப் பிட்டார்கள்.

தலைமை வகுத்த அமைச்சரவர்கள் பழைய இலக்கியங்கள் கடமை உணர்ச்சியை வலியுறுத்துகின்றன. கடைமைஉணர்ச்சி குன்றிவரும் இக்காலத்தில் இப்புராண வெளியீடு அவசியம் என்று கூறி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசிக்கவசமான பொன்னுடையை அமைச்சர் ஆசிரியருக்குப் போர்த்தினுர்கள். திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை திரு. நல். முருகேசமுதலியார், திரு. சி. வேலாயுதம் ஆகியோர் ஆசிரி யரையும், புராணத்தையும், ஆதீனத்தையும் பாராட்டிப் பேசினுர் கள். ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற் புரையும், நன்றியுரையும் கூறினுர்கள். திரு. P. சுவாமிநாதன் கடவுள் வணக்கமும், வாழ்த்தும் பாடினுர்.

## வேலூர் கிருத்திகை உபயவிழா & பிரசாதம் வழங்கும் விழா

சென்னை, தருமையாதீன சமயப்பிரசாரநிலைய வேலூர்க் கிருத்திகைப் பிரசாதம் பெறும் உறுப்பினர்கள் சார்பிலும், நிலைய அன்பர்கள் சார்பிலும் ரூ 75 செலவில் 15—4—64 அன்று வந்த கிருத்திகை வழிபாட்டை அன்பர்கள் பலரும் சென்று உபயமாகச் செய்தனர். ஷை அபிஷேக அர்ச்சனைப் பிரசாதங்களை 16-4-64 அன்று சென்னை சமயப்பிரசார நிலையத்தில் திரு. ச. சிவகுமாரன் அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கினர். திரு. P. சுவாமிநாதன் வேலூர்த் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத் தமிழ் ஓதி பிரார்த்தனை நிகழ்த்தினுர். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினுர்கள்.

12—5—64 அன்று வேலூரில் நடைபெற்ற கிருத்திகை அபிஷேக அர்ச்சனை பிரசாதம் 13—5—64 அன்றுமாலை சென்னை சமயப்பிரசார நிலையத்தில், கல்வி இலாகா தனி அலுவலர்

திரு. எம். பொன்னையா முதலியார் அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பட்டது. திரு. பி. சுவாமிநாதன் வேளூர்த் தேவாரப் பிரார்த்தனை நிகழ்த்தினார். ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள்.

## வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

8—6—64 கிருத்திகையன்று நிலைய அன்பர்கள் சார்பில் வைத்தீஸ்வரன்கோயிலில் ஸ்ரீ தையல்நாயகி அம்பாள் சமேத ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கும், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் அபிஷேக அர்ச்சனைசெய்த விபூதி, குங்குமப்பிரசாதங்களும். சந்தனக்குழம்புப் பிரசாதமும் 10—6—64 மாலை 7-மணிக்கு நிலைய மன்றத்தில் திரு. P. செந்தில்நாயகம் பிள்ளை B. A., அவர்கள் தலைமையில் வேளூர்த் தேவாரம், பிள்ளைத்தமிழ், திருப்புகழ்ப் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கு வழங்கப்பட்டன. திரு. P. சுவாமிநாதன் பிரார்த்தனை நிகழ்த்தினார். ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறினார்கள்.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழாவும் திருவாசகமணிக்குப் பாராட்டு விழாவும்

செந்தமிழ்ச் சொக்கர் திருவருளும், தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தின் அருளாசியினாலும் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வைத்தீஸ்வரன் கோயிலில் எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ தையல்நாயகி அம்பாசமேத ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கும், ஸ்ரீ செல்வமுத்துக் குமார சுவாமிக்கும் 6—7—1964 திங்கட்கிழமை கார்த்திகை நக்ஷத்திரத்தன்று. சென்னைவாசிகளின் நலங்கருதி நமது நிலைய அன்பர்கள் சார்பில் செய்யப்பெற்ற அபிஷேக, அர்ச்சனைப் பிரசாதம் வழங்கும் விழாவும், தென்னாப்பிரிகா முதலிய வெளிநாடுகளில் எட்டுமாத காலமாக சமயப் பிரசாரம் செய்து சிறப்புடன் திரும்பியுள்ள திருவாசகமணி, திரு. K. M. பாலசுப்பிரமணியம், B. A., B. L. அவர்கட்குப் பாராட்டுவிழாவும், 7—7—64 செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணிக்கு நமது நிலைய மன்றத்தில், சென்னை, உயர் நீதிமன்ற நீதிபதி கனம் R. சதாசிவம், B. A., M. L. அவர்கள் தலைமையில்நடைபெற்றது திருவாசகமணிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தின்

ஆசிக் கவசமாகிய பொன்னுடை போர்த்தப்பட்டது. திரு. நல். முருகேச முதலியார், B. A. திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, B. A. திரு. N. R. முருகவேள், M. A., M. O. L. திரு P. திரு ஞானசம்பந்தம் பிள்ளை, M. A. திரு. டாக்டர், மா. இராஜ மாணிக்கனர், M. A. முதலியோர் பாராட்டுரை நிகழ்த்திஞர்கள்.

## சேக்கிழார் சுவாமிகள் குருபூஜை விழா

13—6—64 மாலை 7 மணிக்கு நிலைய மன்றத்தில் சேக்கிழார் பெருமான் குருபூஜைவிழா கொண்டாடப்பெற்றது. சென்னை மாநிலக் கல்லூரி சம்ஸ்கிருதப் பேராசிரியர் திரு. P. திருஞான சம்பந்தம் பிள்ளை M. A., L. T., அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். திரு. ச. சிவகுமாரன் M. A., சேக்கிழார் வரலாறு பற்றியும், திரு. கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார் "பெரிய புராணப் பெருமை" பற்றியும் விரிவுரை நிகழ்த்திஞர்கள். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் வாழ்த்துரையும் கூறிஞர்கள். நிலையத் திருமுறை வகுப்பு மாணவர். திரு. கதிர்வேலும், வித்துவான். திரு. ந. இராமலிங்க மும் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடிஞர்கள்.

## மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

நிலைய மாதாந்தரவழிபாடு 17—5—64 ஞாயிறு மாலை 4 மணி முதல் 9 மணிவரை சென்னை கிருஷ்ணம்பேட்டையில் உள்ள ஸ்ரீ தீர்த்தபாலீசர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. குழுவினர் சிவபுராணம் ஓதி திருக்கோயில் வலம்வந்து முறை யாக வழிபாடு புரிந்தனர். குழுவினர் சார்பில் அபிஷேக ஆரா தனை நடைபெற்றது, அறங்காவலரும், சிவாசார்யர்களும் வரவேற்று உடனிருந்து சிறப்பித்தனர். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் கும்பகோணம் திரு. எஸ். சுந்தரேசஞ் செட்டியார், கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார் முதலியோர் சமய விரிவுரை நிகழ்த்தினர். திரு. பி. சுவாமிநாதன் தேவாரம் ஓதிச் சிறப்பித்தார்.

14—6—64 மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை சிந்தா திரிப்பேட்டை ஸ்ரீ ஆதிபுரீசுவரர் ஆலயத்தில் நிலைய மாதாந்தர சமயப்பிரசாரமும், வழிபாடும் நடைபெற்றன. வழிபாட்டுக் குழுவினர் சார்பில் அபிஷேக ஆராதனை நடைபெற்றபின், குழு வினர் ஆதிபுரீசர் திருக்கோயில் மாடவீதிகளில் சிவபுராணம் ஓதி வலம்வந்து வழிபாடாற்றினர். பின்னர், திரு. K. கமலக் கண்ணன் M. L. C. அவர்கள் தலைமையில் திரு. P. செந்தில் நாயகம் பிள்ளை, கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ் செட்டியார்,

திரு. ச. சிவகுமாரன் M. A., திரு. N. R. முருகவேள் ஆகியோர் சமய விரிவுரை நிகழ்த்தினர்கள். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துரை கூறினர்கள். திரு. P. சுவாமிநாதன் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினர். ஆலய நிர்வாக அதிகாரியும், அறங்காவலர்களும் குழுவினரை வரவேற்று வழிபாட்டைச் சிறப்புற நடத்திவைத்தனர்.

வடதிருமுல்லை வாயிலில்

## மாதாந்தர வழிபாட்டின் ஐந்தாவதாண்டு நிறைவு விழா

சமயப் பிரசார நிலைய வழிபாட்டுக்குழுவின் ஐந்தாவதாண்டு நிறைவு விழாவும், வழிபாடும் சென்னைக்கு அண்மையில் உள்ள வடதிருமுல்லை வாயில் ஸ்ரீ மாசிலாமணி ஈசர் ஆலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. குழுவினர் சிவபுராணம் ஓதிமாட வீதிவலம் வந்து முறையாகத் திருக்கோயில் வழிபாடு நிகழ்த்தினர். திரு. K. C. நாகலிங்க முதலியார் உபயத்தில் சுவாமி அம்பாள், பரிவாரங்கட்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானத்தின் அருட்கொடையால் தொடங்கப்பெற்று திரு. K. C. நாகலிங்க முதலியார் பொருளுதவியால் பூர்த்தி செய்யப்பெற்ற திருவாசி ஸ்ரீ கொடியிடை நாயகிக்குச் சாத்தப்பெற்றது ஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளால், ஸ்ரீ நடராஜர் சந்நிதியில் பன்னிரு திருமுறைக் கோயில் பிரதிட்டை செய்யப்பெற்றது.

திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் சமயப் பிரசாரம் நடைபெற்றது. திரு. K. கமலக்கண்ணன், வட இந்திய சாது, ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் முதலியோர் ஐந்தாண்டில் நடந்த வழிபாட்டு நிகழ்ச்சிப் பயன்பற்றிப் பேசினர். கோயில் அறங்காவலர் திரு. பொன்னுரங்க முதலியார் குழுவினரை வரவேற்று வழிபாடு முதலியவற்றை உடனிருந்து நடத்திவைத்தார்கள்.

## அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா

7—5—64 மாலை நிலைய மன்றத்தில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் அப்பர் சுவாமிகள் குருபூசை விழா சிறப்பாக நடைபெற்றது. 6-5-64 அன்று திருவாமூரில் அப்பர் சுவாமி கோயிலில் நடையெற்ற குருபூசைப் பிரசாதம் அன்பர்கட்கு வழங்கப்பட்டது. திரு. C. N. சிங்காரவேல் M. A., அவர்கள் அப்பர் தேவாரம்பற்றி விரிவிரை நிகழ்த்தினர்கள்.

# எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

( குரோதிஸ்ரீ ஆனிமீ 1௳ முதல் 32உ முடிய)
( 14—6—64 முதல் 15—7—64 முடிய )

## 1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

மேஷராசி 9 பாதங்களும் சுபமேயாகும். ஆனாலும் மத்திய காலங்களில் காரியவிக்னம் எதிர்பாராத செலவினங்கள் வீண் அலைச்சல் இவைகளையும் தரும். தெய்வ பலத்தால் சகலமும் ஜெயிக்கும். ஞாயிறு, வியாழன் சுபமாகும்.

## 2. ரிஷபம். கார்த்திகை $\frac{3}{4}$ - ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

கார்த்திகை 2ம் பாதம் உத்தியோக உயர்வையும் இடம் மாறலையும் கொடுக்கும். மற்றய 8 பாதங்களும் மிச்சிரபலனைத் தரும்; அடிக்கடி வீண் அலைச்சல்களும் வியாபாரிகளுக்கும் பூமி அதிபர்களுக்கும் பலவிதமான கவலைகளைக் காட்டும். தெய்வீகத்தன்மை பொருந்தியவர்கள் மாத்திரம் அதிகமாய் பாதிக்கப் படமாட்டார்கள். ஷ மாதம் குருவுக்கு அதிசார பலன் கிடைப்பதால் மேற்படி ராசிக்காரர்கள் விசேஷ நன்மையை அடைவது சிரமம். புதன், வியாழன் சுப மாகும்.

## 3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ர பலனைத்தான் தரும் அடிக்கடி சஞ்சாரம் ஏற்படும். ஜீவனலாபம் உண்டுபண்ணும். மேலோர் பெரியோர்களுடைய அன்பு கிடைக்கும். கிருஷி வாணிபயம் பாதிக்கப்படும். விஷ்ணு உபாசகர்கள் சுகமடைவார்கள். புதன், வியாழன் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். கிரயவிக்ரயங்களில் லாபம் உண்டுபண்ணும். விவகாரம் ஜெயிக்கும். வெகு காலமாய் நஷ்டமடைந்த ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் வந்து சேரும். தெய்வபலம் முன்னிற்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத்தரும். தூர யாத்திரையை உண்டுபண்ணும். உத்தியோக உயர்வு ஏற்படும். கிரகலாபம் உண்டுபண்ணும். ஆனாலும் மத்திய காலங்களில் ஆரோக்கியக் குறைவும் அதிக விரயமும் உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசியில் ஹஸ்தம் நான்கு பாதங்களும் சுபத்தையும் ஆரோக்கியத்தையும் தந்து கிரக சுகபோகங்களையும் உண்டு பண்ணும். புத்திராதிகளால் சுகம் உண்டாகும். சஞ்சார பலனையும் கொடுக்கும். நஷ்டதனம் தானாக வந்துசேரும். உத்திரம் 2, 3, 4 பாதங்களும், சித்திரை 1, 2 பாதமும் சுபமிராது. வரவுக்கு மிஞ்சின செலவும் ஆரோக்யக் குறைவும் ஜீவனத்தில் பல மாறுதல்களும் சதா கவலையும் கொடுக்கும். தெய்வபலம் இருந்தால் ஜெயிக்கலாம். சனி, செவ்வாய் சுபமாகும்.

7. துலாம். சித்திரை ½, - சுவாதி - விசாகம் ¾.

சித்திரை 3, 4 பாதங்கள் சுபமிராது. சதா துக்க பலனையே உண்டுபண்ணும். ஜீவனத்திலும் இல்லற வாழ்க்கையிலும் பல சிரமங்களைக் காட்டும். சுவாதி நான்கு பாதங்களும், விசாகம் மூன்று பாதங்களும் சுபத்தைத்தரும். கிரக கிராம பூமி லாபங்கள் புதிதாக ஏற்படும். இல்லறசுகம் ஓங்கும், தெய்வசக்தி பிரகாசிக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

**8. விருச்சிகம், விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.**

விசாகம் 4ம் பாதமும் அனுஷம் நான்கு பாதங்களும் மிச்ர பலனைத் தரும், தூர யாத்திரையைக் கொடுக்கும். இடம் மாறச் செய்யும். கேட்டை நான்கு பாதங்களும் சுபமேயாகும். கிரகசுகம் ஓங்கும். கிரய விக்ரயங்களில் லாபத்தை உண்டு பண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

**9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$**

தனுர்ராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். நஷ்டதனம் கிடைக்கச்செய்யும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். புத்திர பௌத்ராதிகளால் சுகம் உண்டுபண்ணும். ஆரோக்யம் உண்டாகும். சனி, செவ்வாய் சுபமாகும்,

**10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம்**

மகரராசி 9 பாதங்களும் சுபமேயாகும். எதிர்பாராத மேல் பதவிகளைக் கொடுக்கும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும், மேலோர் பெரியோர்களின் அன்பைத்தரும். தெய்வபலம் முன்னிற்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி - $\frac{3}{4}$.**

கும்பராசி 9 பாதங்களும் சுபமேயாகும். வித்யாவிருத்தியாகும். உத்யோக லாபம் உண்டுபண்ணும். ஆரோக்யம் உண்டாகும். நூதன முறையில் தொழில் கிடைக்கும். திங்கள் புதன் சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி - ரேவதி.**

மீனராசி 9 பாதங்களும் என்றும் கண்டிராத சுக சந்தோஷ போகங்களைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். தொழில் ஓங்கும். நூதன முறையில் ஜீவனலாபம் தரும். தெய்வபலம் முன்னின்று காக்கும். திங்கள் புதன் சுபமாகும்.

குறிப்பு :— மஹாஜனங்களுக்கும் மேலோர் பெரியோர்களுக்கும் மிகுந்த வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்வதாவது.

நடப்பு குரோதி வருஷத்திய எதிர்கால பலன்களை ஒவ்வொரு மாதமும் தெரிவித்துக்கொண்டே வருகிறேன். மேற்படி ஆடி மாதமும் குரு, சனி அதிகார வக்ரத்தாலும், சுக்ரஸ்தம்பகதியாலும் உலகத்தினர்க்கு சஸ்யதான்ய விருத்திகளிலும் கிரிஷி வாணிஜ்யங்களிலும் ரொம்ப சிரமத்தைக் காட்டும். ஆனால் மேற்படி மாதம் எங்குபார்த்தாலும் ஆஸ்தீகம் ஓங்கி பக்தி பரவசத்தோடு மகாஜனங்கள் எல்லாம் தெய்வீக வழிபாடுகளை மேற்கொண்டு சத்காரியங்களைச் செய்து வருவதின் பலனாக மூர்த்தியாகிய சர்வேஸ்வரனுடைய அருள் ஏற்பட்டு நமது தக்ஷிண பாரதத்துக்கு சுபிக்ஷமுண்டாகும்படியாக எந்தெந்த இடங்களில் வருஷம் ஏற்பட வேணுமோ அந்தந்த இடங்களில் மாதம் ஆரம்பம் முதலே அதிக மழை ஏற்பட்டு நதிகள் மூலமாக சகல சுபிக்ஷத்துக்கும் அறிகுறியாக சத்தியவிருத்தி ஏற்படச் செய்யும். கடவுள் காப்பார். முக்கியமாக அரைகுறை பக்தியோடு நாம் தெய்வத்தை சதா வழிபட்டும் உடனே பலன் ஏற்படவில்லையே என்று தெய்வத்தையும் சத்கர்மாக்களையும் நிந்திக்காமல் மகாஜனங்கள் கடமை என்று சத்காரியங்களை செய்துவர சுபமுண்டாகும்.

சுபம்.

---

## தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி மாணவருக்குப் பரிசு

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி நிறைநிலை மாணவர் இரா. செல்வக்கணபதி ஆத்தூர் தமிழ்ச்சங்கம் (திண்டுக்கல் வட்டம்; மதுரைமாவட்டம்) நிகழ்த்திய பிச்சையம்மாள் நினைவுக் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்ற பொருள்பற்றி இருபத்தைந்து பக்க அளவில் திறனாய்வுக் கட்டுரை வரைந்து இரண்டாம் பரிசு பெற்றுள்ளார். இவ்வாண்டு மேத் திங்களில் நிகழ்ந்த இவ்விலக்கியப் பரிசுப் போட்டியில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளும் வாழும்தமிழன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்குவளை மகாகும்பாபிஷேக விழாவில்



புதிதாக வாங்கப்பட்ட யானைக்குத் தியாகராஜா என்னும் பெயர்சூட்டுதல்

## சென்னை சமயப்பிரசார நிலைய வழிபாட்டுக்குழுவினரின்

# சோழநாட்டுத் தல யாத்திரை

1964 ஜூலை மாதம் 10 ஆம்தேதி முதல் ஒருவாரம் தருமையாதீன சென்னை சமயப்பிரசார நிலைய வழிபாட்டுக் குழுவினர் சிதம்பரம், சீகாழி, வைத்தீசுவரன்கோயில் திருப்புன்கூர், ஆச்சாள்புரம், திருவெண்காடு, முதலிய 25 தலங்களில் வழிபாடு நிகழ்த்துவர். அன்பர்கள் கலந்து கொண்டு பயன் அடைவார்களாக.

சென்னை, தருமபுரஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய மாதாந்திர சமயப்பிரசார வழிபாட்டுக் குழுவினர் 20—7—64 முதல் 27—7—64 முடிய எட்டு நாட்கள் சோழநாட்டுக் காவிரியின் வடகரைத் தலங்கள் 63ல் 31 தலங்களில் வழிபாடும் சமயப்பிரசாரமும் நிகழ்த்த உள்ளனர். ஆங்காங்கு உள்ளவர்கள் வழிபாட்டிலும் சமயப்பிரசாரத்திலும் கலந்துகொண்டு பயன் அடையலாம் யாத்திரைக்கு உள்ள தலங்கள் 1 சிதம்பரம் 2 திருவேட் களம். 3 திருநெல்வாயில். (சிவபுரி) 4 ஆச்சாள்புரம். 5 திருமயேந்திரப்பள்ளி, 6 சீகாழி, 7 வைத்தீசுவரன் கோயில், 8 திருமுல்லைவாயில், 9 திருப்புன்கூர், 10 திருக் கண்ணார்கோயில், 11 திருக்கலிக்காமூர், 12 திருவெண்காடு, 13 திருச்சாய்க்காடு, 14 பல்லவனீச்சரம், 15 கீழைத் திருக்காட்டுப்பள்ளி, 16 திருநீடூர், 17 திருநின்றியூர், 18 திருவன்னியூர், 19 குறுக்கைவீரட்டம், 20 திருக்கருப் பறியலூர், 21 திருமண்ணிப்படிக்கரை, 22 திருவாழ் கொளிப்புத்தூர், 23 பந்தணைநல்லூர், 24 திருமணஞ் சேரி, 25 திருஎதிர்கொள்பாடி, முதலியன.

inted & Published by K. Sundaresa Iyer. Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-7-64.